Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (28.10.2011) பக்கங்கள் 16 ஓசை - 28

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/984)



பிணக்குகளை தீர்க்க...

(05)



சரணடைய விருப்பம்

(13)



பேச்சு ஒரு நாடகமா?

(08)



பணக்காரப் பெண்

(12)

## அரச நிர்வாக சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

அரச நிர்வாக உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

பல அரச நிறுவனங்களில் 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வெற்றிடங்களை இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி செய்யவிருப்பதாக அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரட்ன தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய பல்வேறு காரணங்களினால், நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைகள், உரியவாறு இடம்பெறவில்லை. இதனால், இச்சேவைக்கு சேர்த்துக் கொள்ளும் ஒழுங்கு விதிமுறைகளைப் பேணுவதற்கு முடியாமல் போனதாக, அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக் கொள்வோர், நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். இதன் (15 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் தற்போதைய நிலை 7 நாடுகளின் பிரதிநிதிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்து அறியும் வகையில் இந்தியா உட்பட 7 நாடுகளைச் சேர்ந்த நடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து சிவில் அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், வீட்டுத் திட்டம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களையும் பார்வையிட்டனர்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா (15 ஆம் பக்கம் பார்க்க)





# நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் அவசியம்

## அரசின் பொறுப்பை வலியுறுத்துகிறார் பான் கீ மூன்

(கொழும்பு)


இலங்கையில் இடம்பெற்ற போரின் காயங்களில் இருந்து முற்றாக மீள்வதற்கும், இனங்களுக்கு இடையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவது அவசியமானது என அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வடபகுதியில் இடம்பெற்று வரும் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புப் பணிகளுடன் இனமுரண்பாடுகள் தொடர்பில் கௌரவமான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான தேசிய ரீதியில் கலந்துரையாடல் நடத்தப்படுவது முக்கியமானது எனவும் மகிந்த சமரசிங்கவிடம் பான் கீ மூன் எடுத்துக் கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பிலேயே ஐ.நா. செயலாளர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். எனினும் பொதுச் சபைக் கூட்டத் தொடரின் மூன்றாம் குழுக் கூட்டத்தின் பக்கநிலைச் சந்திப்பாகவே இச் சந்திப்பு இடம்பெற்றதாக அரசாங்கம் கூறியுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## 2013 பொதுநலவாய உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவதில் மாற்றமில்லை

### இந்திய வெளியுறவுச் செயலர் அறிவிப்பு



(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் அடுத்த உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே முடிவெடுக்கப்பட்டிருப்பதனால் இப்போதைக்கு அடுத்த உச்சிமாநாடு நடக்கும் இடம் பற்றிய சர்ச்சைக்கு இடமில்லையென்று இந்திய வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மாத்தாய் அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களை சந்தித்து அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்த இந்திய வெளிவிவகார செயலாளர், 2009 ஆம் ஆண்டிலேயே பொது நல அமைப்பு நாடுகளின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நிதிச்சந்தை நெருக்கடியைப் போக்க மாற்று நடவடிக்கைகள் அவசியம்



### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

உலக பொருளாதாரத்துக்கு ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளே அடித்தளமாக உள்ளதால் முன்னேறிய நாடுகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் அமைந்துள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவர்களின் விரிவுரை பகிஷ்கரிப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

சிவில் சமூகப்பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றுடன் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த 17 ஆம் திகதி முதல் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டமானது இன்றுடன் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றது. கடந்த இரண்டு வாரங்களாக மாணவர்களின் பாதுகாப்பை (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நோக்கத்திற்காகவே ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அவுஸ்ரேலிய நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடரப்பட்ட வழக்கு என இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் (15 ஆம் பக்கம் பார்க்க)


## பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல் யாழ். மாநகர சபையில் கண்டனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் அடுத்தடுத்து இனந்தெரியாதவர்களின் தாக்குதல்களுக்கிலக்காகி படுகாயமடைந்திருக்கும் சம்பவம் குறித்து யாழ். மாநகர சபையின் நேற்றைய மாதாந்த பொதுக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கவனயீர்ப்புப் பிரேரணையொன்றையும் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா சபையின் அங்கீகாரத்திற்கு கொண்டுவந்த போது அனைத்து உறுப்பினர்களும் இதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதுடன், தீர்மானத்தின் பிரதி ஜனாதிபதி மகிந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# அனுமதியற்ற தொலைத்தொடர்பு கோபுரங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க யாழ். மாநகரசபை அனுமதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைப்பரப்பில் தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களினால் மாநகர சபை அனுமதியின்றி தொலைத் தொடர்பு கோரங்கள் அமைக்கப்பட்டிருப்பதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு யாழ். மாநகரசபை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்ற 10 ஆவது மாதாந்தப பொதுக்கூட்டத்திலேயே சபை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

யாழ்.நகர்ப்பகுதியில் பண்ணையில் ஸ்ரீலங்கா ரெலிக்கொமமின் இரண்டு தொலைத்தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

120 அடி உயரமான கோபுரமும் 150 அடி உயரமான கோபுரமாகவும் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் சிலவும் (மொபிற்றல், டயலொக, உட்பட) சிறிலங்கா ரெலிகொம்முடன் இணைந்து சேவையை வழங்கி வருகின்றன. இவை தவிரந்த சுமார் 120 வரையான தொலைத தொடர்பு நிலையங்கள் யாழ். மாநகர சபையின் எல்லைப் பரப்பில் அனுமதியின்றி தொலைத்தொடர்க் கோபுரங்களை அமைத்திருக்கின்றன. இதனால் பொதுமக்களுக்குப் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும. சுற்றச்சாட்டின் அடிப்படையிலேயே யாழ் மாநகரசபை இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்றது.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினதும் யாழ் மாநகர சபையின் அனுமதியியும் பெறப்பட்டே இக் கோபுரங்கள் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் ஐந்து மீற்றர் உயரத்திற்கு கீழ்ப்பட்ட போபுரங்களுக்கு இவ்வாறு அனுமதி பெற்றிருக்கவேண்டியதில்லை எனவும் சுமார் 60 அடி உயரமான தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அனுதிவழங்க முடியும் எனவும் யாழ். மாநகரசபை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு இல்லாத தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைத்திருக்கும் நிறுவனங்கள் மீது எதிர்காலத்தில் யாழ். மாநகரசபை வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இவ்விடயம் குறித்துப் பத்திரிகைகள் வாயிலாக பொது மக்களது அபிப்பிராயமும் பெறப் படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது. (பா)

# சிறுவர் உரிமைகளை பாதுகாக்க செயற்திட்டம்

மனித உரிமை ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் சிறுவர் உரிமை மேம்பாடு தொடர்பாக ஒரு செயற்றித்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இத்திட்டம் பிரதேச செயலகம் தோறும் சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக்களை அமைதது அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறுவர் உரிமை மீறப்படுவது தொடர்பாக அறிக்கை இடலும், பதிலளித்தல் தொடர்பாக இக்குழுக்களை ஊக்கப்படுத்தி சிறுவர் உரிமையைப் பாதுகாக்க தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் 10 முதலாவது நிகழ்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மணிக்கு இடம்பெறவுள்ளது. (எப்.எஸ்)

# கந்தசஷ்டியை முன்னிட்டு வாகனங்களுக்கு மாற்று வழி

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி கோவிலில் இடம்பெறும் கந்தசஷ்டி திருவிழாவினையொட்டி நேற்று முதல் வரும் 12 ஆம் திகதிவரை பி.ப. 4 மணி தொடக்கம் 7 மணிவரை பருத்தித்துறை வீதியில் வாகனப் போக்குவரத்து நல்லூர் கந்தசாமி கோவிலை அண்மித்த பகுதியில் தடைசெய்யப்படவுள்ளதால், சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களையும் பின்வரும் மாற்று வழியினைப் பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் அனைத்து வாகனங்களும் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, நல்லூர் 2 ஆம் குறுக்குத்தெரு ஊடாகவும், பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் சகல வாகனங்களும் நல்லூர் 2ஆம் குறுக்குத்தெரு வழியாகச் செல்லுமாறும் அறிவித்துள்ளார்.

# அதிகளவான பயணிகளுடன் வேகமாகச் செல்லும் சிற்றூர்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலிருந்து புறநகர்ப் பிரதேசங்களுக்குச் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதனால் வீதியில் செல்லும் ஏனைய வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இந்த நிலைமை மாலை நேரங்களில் சேவையில் ஈடுபடும் பஸ்களிலே இடம்பெறுகிறது. யாழ்ப்பாண நகரில் இருந்து புன்னாலைக்கட்டுவன், வயாவிளான், கோண்டாவில், உரும்பிராய், கோப்பாய், அச்சுவேலி, ஆவரங்கால், கல்வியங்காடு நோக்கிப் புறப்படும் சிற்றூர்திகள் நகரப் பகுதிகளில் எல்லைகளில் வைத்து பயணிகளை அளவுக்கதிகமாக ஏற்றுகிறது. மேலும் வாகனங்கள் இவ்வாறு ஏற்றியதுடன் நில்லாது மிக வேகமாகச் செல்கிறது.

இதனால் வீதிகளில் இருமருங்கும் செல்வோர் உயிரைக் கையில் பிடித்தபடி பயணிக்க வேண்டிய கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வழமையாக ஒவ்வொரு தினமும் இடம்பெறுகிறது. (எப்.எஸ்)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக சர்வதேச சிறுவர் தினம் நாளை





(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நாளையதினம் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப் படவுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நாளை காலை 9 மணிக்கு, சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு, பிரதமவிருந்தினராக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி.சிவகரன் சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.கந்தசாமி, சண்டிலிப்பாய் சுகாதார பணி மனையின் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் த.நிர்மலானந்தன், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இ.மல்கொம்பதே உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விழிப்புணர்வுப் பேரணி, சிறுவர்களுக்கு பயன்தரு மரங்கள் வழங்கல், கெக்குழு சிறுவர் கழகப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், சிறுவர் இல்ல கழகப் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# அபராதம்

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கு இடையூறு விளைவித்து மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபருக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் யாழ் நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட வழக்கினல் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜரப்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனநதராசா குற்றவாளிக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

** ** **

பொது மக்களுக்கு இடையூறு விளைவித்து பொலிஸ் சமிக்கையைப் பொருட்படுத்தாது மோட்டார் சைக்கிளை செலுத்திய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ். நீதவான நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட இவ் வழக்கில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜரப்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குற்றாவாளிக்கு 2500 ரூபா தண்டம் செலுத்துமாறும் தண்டப் பணம் செலுத்தத்தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கக் கோரியும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

# குறுக்கே ஓடியது நாய் ஆட்டோ சாரதி படுகாயம்

(யாழ்ப்பணம்)

ஆட்டோவுக்கு குறுக்கே நாய் ஓடியதில் ஆட்டோ விபத்திற்குள்ளாகி சாரதி படுகாயம் அடைந்துள்ளார். ஆட்டோவும் சேதமடைந்துள்ளது.

நீர்வேலிப் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவதில் நெல்லியடிப் பகுதியைச் சேரந்த ரங்கநாதன் (வயது - 43) என்ற குடும்பஸ்தரே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

(யாழ்ப்பணம்)

நாளைய தினம் பின்வரும் மண்டபங்களில் நடைபெறவிருந்த அரசாங்க அலுவலர்களுக்கான சிங்கள மொழி மூல எழுத்துப் பரீட்சை வேறு மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார்.

01. யாழ்ப்பாணம் இந்துகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II. யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் மண்டப இலக்கம் 1 இற்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் 3 திருக்குடும்ப கன்னியர்மடம் மண்டப இலக்கம் 2 இற்கும் யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டப இலக்கம் 3, யாழ். சென்மேரிஸ் வித்தியாலத்திற்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபல இலக்கம் III, யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

# கிணற்றில் வீழ்ந்து குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மனநிலை பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் நீர்வேலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மோகனதாஸ் ஜோதிலக்சுமி (வயது - 36) என்ற குடும்பப் பெண்ணே கிணற்றில் விழுந்து உயிரிழந்தவராவார். இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த பெண் இளம் வயதில் இருந்து மனநிலை பாதிக்கப் பட்டவராக இருந்துள்ளார். இவரை மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசு சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எஸ்)

# சிறுவர்,முதியோர் தின விழா



(வடமராட்சி)

தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்ட வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின விழா நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்ட பத்தில் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் விசேட நிகழ்வாக பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், முதியோருக்கான கௌரவிப்பும் சிறுவர், முதியோர் தினப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். (116)

பிறரது குற்றம் குறைகளைக் காணாதீர்கள் அவைகளைக் கேட்கவோ, பேசவோ செய்யாதீர்கள். அனைவரிடமும், அனைத்திலும் நல்லவற்றையே காணமுயலுங்கள். பிறரது தவறுகளைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். - அமிர்தானந்தமயி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அணுவாயுதத்தை விடலாமா?

முன்னாள் லிபியத் தலைவர் கேணல் கடாபி படுகொலை செய்யப்பட்டது குறித்து வந்துள்ள பல்வேறு விமர்சனங்களில் முக்கியமானது அவர் வஞ்சிக்கப்பட்டார், நம்பவைத்து ஏமாற்றப்பட்டார் என்பதாகும். இனி வருங்காலத்தில் அமெரிக்கா தலைமையிலான இந்த மேற்கு நாடுகளை நம்பி எந்தவொரு நாடும் அணுவாயுதத் தயாரிப்பைக் கைவிட தயங்கும் என்பதே இந்தப் படுகொலை உணர்த்தியிருக்கும் பாடம் என்கிறார்கள் விமர்சகர்கள்.

லிபியாவில் தமக்கு எதிரான போராட்டங்களை ராணுவத்தின் மூலம் கடாபி அடக்கினார் என்பதுதான், பாதுகாப்பு சபையில் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் முக்கிய அம்சம். ஆனால், கடாபியின் அடக்குமுறைக்கும் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கும் எதிராக ஐ.நா. தீர்மானம் கொண்டுவர முன்னின்ற நியாயவான்கள்தான், பின்னர் சிர்த் நகரையே தரைமட்டமாக்கி, ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றிருக்கிறார்கள். கடாபியைப் பிடித்த இடத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட உடல்கள் சிதறிக் கிடந்திருக்கின்றன. கடாபி எப்படிச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார் என்பதை படக்காட்சிகளாகவே பார்த்து உலகம் அதிர்ந்திருக்கிறது.

சொந்த நாட்டு மக்களைச் சித்திரவதை செய்தார், எதிர்க்கட்சிகளை ஒடுக்கினார், பத்திரிகைகளை முடக்கினார் என்றெல்லாம் கடாபி மீது சாட்டப்படும் குற்றங்களில் உண்மை உண்டு. ஆனால், லிபிய மக்களிடம் கிளர்ச்சியைத் தூண்டி கடாபியை அழித்து முடித்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட கூட்டு நாடுகள் மீது வைக்கப்படும் விமர்சனத்திலும் அதைவிடப் பலமான உண்மை இருக்கிறது. "கடாபி பல்வேறு வகையான குற்றங்களைப் புரிந்தவராக இருக்கட்டும். அதற்காக இன்னொரு நாட்டில் புகுந்து நாட்டின் தலைவரைக் கொடூரமாகக் கொல்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அணு ஆயுதங்களைக் கைவிடுவோருக்கும், வைத்துக் கொள்ளாதவர்களுக்கும் இதுதான் நிலை என்றால், அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் மீது உலக நாடுகளுக்கு, அதிலும் குறிப்பாக மேற்கத்திய எதிர்ப்பு நாடுகளுக்கு நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிடும். இதுவரை அணுஆயுதம் உள்ளிட்ட பேரழிவு ஆயுதங்களை வைத்துக் கொள்ளாத நாடுகள்கூட அவற்றைத் தயாரிப்பதற்கான முயற்சிகளைத் தேடக்கூடும்" என்று அந்த விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

10 ஆண்டுகளுக்கு முன்பு, பாகிஸ்தான் விஞ்ஞானி ஏ.க்யூ.கான் மூலம் அணு ஆயுதத் தயாரிப்பு இரகசியங்கள் வெளிப்பட்டுச் சந்தைக்கு வந்த பிறகு, அணு ஆயுதத் தொழில் நுட்பம் என்பது மேலும் பல நாடுகளுக்குக் கிடைக்கத் தொடங்கியிருந்தது. லிபியாவும் இந்தத் தொழில்நுட்பத்தை ஒரு விலை கொடுத்து "கள்ளத்தனமாக" வாங்கியது. ஆபிரிக்காவின் சில பகுதிகளில் தோரியம் போன்ற மூலப்பொருள்கள் கிடைத்தன. இரண்டையும் கொண்டு அணுஆயுதத்தை உருவாக்கிவிட கடாபி திட்டமிட்டிருந்தார்.

மூலப்பொருள்களைச் செறிவூட்டும் பணிகளும் துரிதமாக நடந்தன. அப்போதுதான் இரகசியப் பேச்சு என்ற பெயரில் பிரிட்டனும் அமெரிக்காவும் கடாபிக்கு வலை விரித்தன. 2001–ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பிறகு, கொஞ்சம் மேற்குப்பக்கம் கடாபி சாயத் தொடங்கியிருந்த காலம் அது. பக்கத்து நாட்டுக் கலகக்காரர்களுக்கு உதவுவதை அவர் நிறுத்தியிருந்தார். பலஸ்தீனப் போராட்டக்காரர்கள் மீதான ஆர்வத்தையும் கைவிட்டிருந்தார். அயர்லாந்து புரட்சிப் படைக்கு உதவி செய்து பிரிட்டனைச் சீண்டுவதற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

மேற்கத்திய நாடுகளின் சதியை கடாபி தெரிந்து கொள்ளவில்லை. பிரிட்டனும் அமெரிக்காவும் கேட்டுக் கொண்டபடி அணு ஆயுதத்தைக் கைவிடுவதாக அவர் அறிவித்தார். இரசாயன ஆயுதங்கள், நெடுந்தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைகள் போன்றவற்றை ஒப்படைத்தார். இது உலக நாடுகளுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அணு ஆயுதக் கள்ளச்சந்தையை ஏ.க்யூ.கான் உருவாக்கியிருக்கிறார் என்பதற்கான ஆதாரங்களையும் அமெரிக்காவிடம் கொடுத்தார் கடாபி. பூரித்துப் போன பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் நேரில் சென்று கடாபியைப் பாராட்டினார். அதன்பிறகு பல முக்கிய எண்ணெய் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. கடாபியின் படைகளுக்கு பிரிட்டன் பயிற்சி அளித்தது. இப்படிப் பல வகையிலும் கடாபிக்கும் மேலைநாடுகளுக்குமான நெருக்கம் அதிகரித்தது. ஆனால் இந்த உறவு கடாபியை வீழ்த்த விரிக்கப்பட்ட வலைதான் என்பது இப்போது அம்பலமாகியிருக்கிறது.

கடாபிக்கு வீசிய அதே வஞ்சக வலையைத்தான் வடகொரியாவுக்கும் ஈரானுக்கும் மேற்கத்திய நாடுகள் வீசின. ஆனால் அவை மசியவில்லை. அணுஆயுத, அணுசக்தித் திட்டங்களைக் கைவிடுவதாக இல்லை. அதனால் இன்று வரைக்கும் பொருளாதாரத் தடைகள் போன்ற சாத்வீக வழியிலேயே அந்த நாடுகளுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் மேற்கத்திய நாடுகளை நம்பி, தம்மிடம் இருந்த ஆயுதங்கள் அனைத்தையும் ஒப்படைத்த கடாபிக்கு துரோகம் இழைக்கப்பட்டு விட்டது.

– ஆசிரியர்

### யாழ்.பல்கலைக்கழக விவகாரம்

# ஜே.வி.பி. - கூட்டமைப்பு கூட்டுச்சதியே காரணம்

## உயர்கல்வி அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் ஜே.வி.பியினதும் கூட்டுச்சதியே காரணம் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு பின்னணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, மற்றும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் செயற்படுகின்றனர். அத்துடன் இந்த சதித்திட்டத்திற்குப் பின்னால் விடுதலைப் புலிகளின் நிழலாக செயற்படும் புலம்பெயர் தமிழர்களும் பங்காற்றுகின்றனர்.

மாணவர்களை அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடவிடாமல் தடுத்து அவர்களை வீதிக்கு இறக்குவதையே ஜே.வி.பி. இலக்காக் கொண்டுள்ளது.யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, வடக்கில் கல்வி நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் முயற்சி செய்வதாக குற்றஞ் சாட்டியிருந்தார். அது உண்மைதான் அந்தக் கூற்று பிழையானதல்ல. இவ்வாறு மற்றவர்களின் தூண்டுதல்களினால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் இருந்து விலகக் கூடாது.

எனினும் மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. பிரச்சினைகளில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மீது உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

# தொல்பொருட்களைப் பாதுகாக்க புதிய சட்டம் உருவாக்கத் திட்டம்

(கொழும்பு)

தொல்பொருட்களைக் கொள்ளையிடுவது மற்றும் அவற்றை அழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நபர்களுக்கு எதிராக புதிய சட்டங்களை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாக தொல்பொருள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதன் பிரகாரம் தொல்பொருள் சட்டத்தில் புதிதாக திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்தார்.

தொல்பொருட்களைக் கொள்ளையிடுவதற்கு பல்வேறு அமைப்புகளினால் நபர்கள் தூண்டப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். தொல்பொருட்களைக் கொள்ளையிடுபவர்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய இரண்டு தொடக்கம் ஐந்து வருடகால சிறைத்தண்டனை அல்லது 50 ஆயிரம் ரூபாவிற்கு அதிகமான அபராதம் விதிக்கப்படுவதாக அவர் கூறினார்.

தொல்பொருட்களைக் கொள்ளையிடுபவர்கள் மற்றும் அவற்றை அழிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும், அதற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தொல்பொருள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட ஆணையாளர் நாயகம் விரைவில் குறித்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# பத்து மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 10 மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் உப பீடாதிபதி பேராசிரியர் கேசனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

குறித்த 10 மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பகிடிவதை சம்பவமொன்றை முன்னிலைப்படுத்தி இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த மோதலில் மாணவர்கள் சிலர் காயமடைந்ததாக உப பீடாதிபதி பேராசிரியர் கேசனிக்கா ஹிரிம்புரேகம சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகத்தின் சுமூகமான நிலைமையைப் பேணும் நோக்கில் முகாமைத்துவப் பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடக் கல்வி நடவடிக்கைகள் 2 வாரங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் பீடமும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தப்பியோடும் சிறுவர்கள் காரணம் அறிய ஏற்பாடு

(கொழும்பு)

சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் இருந்து அதிகளவான சிறுவர்கள் தப்பிச் செல்கின்றனர். இதற்கான காரணத்தை அறிந்து கொள்வதற்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஊடாக சமூகமயப்படுத்தும் பெரும்பாலானோரின் எதிர்காலம் சிறப்பாக அமைவதில்லை என ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் உரிய தொழில் அறிவூட்டல்கள் வழங்கப்படுவதில்லை என குறித்த ஆய்விலிருந்து தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன், அரச சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி அடையவில்லை என நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் சரத் அபே குணவர்தன குறிப்பிட்டார்.

அதனால், அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலைகளின் ஊடாக இந்த தொழிற்பயிற்சிகளை வழங்க வேண்டிய தேவை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். அரச சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் தப்பிச் செல்வதாக ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சிறுவர்கள் தப்பிச் செல்வதற்கான காரணம் மற்றும் அவர்களின் மனநிலை தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூகமயப்படுத்தப்படும் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சுமித்ரா ராஹுபத்த தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# சட்டத்தை பாடவிதானங்களில் சேர்த்தால் குற்றச் செயல்களை குறைக்க முடியும்

## சத்தியப்பிரமாண ஆணையாளர் எஸ். செல்வகுணபாலன்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கு சமயத்தை ஒரு பாடமாக பாடவிதானத்தில் இணைத்ததைக் காட்டிலும், நாட்டில் சட்டத்தை பாடவிதானத்தில் சேர்த்தால் நாட்டில் குற்றச் செயல்களைக் குறைக்க முடியும் என சட்டத்தரணியும், சத்திரயப்பிரமாண ஆணையாளருமாகிய எஸ். செல்வகுணபாலன் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சிறுவர் உரிமை தொடர்பான இரண்டாம் நாள நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இன்று பொதுச்சேவையில் ஈடுபட்டிருக்கும் பலருக்கு நாட்டின் சட்டங்கள், அவற்றை மீறினால் வழங்கப்படும் தண்டனைகள் பற்றிய போதிய அறிவு இல்லாத காரணத்தால் பல குற்றங்கள் இடம்பெறுகின்றன. இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களும் தமக்குரிய நீதியைப் பெற முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான நிலையை மாற்றுவதற்கு பொதுவாக தெரிந்திருக்க வேண்டிய சட்டங்களை பாடவிதானத்தில் இணைத்து மாணவர்களுக்குக் கற்பித்தால் நாட்டில் குற்றச் செயல்கள் குறைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் என்றார்.

## தென்மராட்சி வலயத்தில் சிறுவர் அரங்க நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகளில் கைதடி குமாரசாமி மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், நாவற்குழி மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 50இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருக்கின்றபோதிலும் ஆறு பாடசாலைகள் மட்டுமே இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதது. (உ-11)

## காலபோக நெற் செய்கை

(வவுனியா)

வவுனியாவில் இந்த ஆண்டின் இறுதிக் காலபோகத்திற்கு 19 ஆயிரத்து 438 ஹெக்டெயரில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜெ. ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 17 ஆயிரத்து 524 ஹெக்டெயரில் நெற்செய்கை செய்யப்பட்டது. எனினும் 15ஆயிரத்து 724 ஹெக்டேயரிலேயே அறுவடை செய்ய முடிந்திருந்தது.

ஏறத்தாழ 4500 ஏக்கர் நெற்செய்கை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டது.

## மீட்கப்பட்ட சைக்கிள்களை உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்

(தெல்லிப்பளை)

சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மீட்கப்பட்ட சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் தெல்லிப்பளை குற்றத் தடுப்பு பிரிவினருடன் தொடர்பு கொண்டு தமது சைக்கிள்களுக்கான அடையாளங்களை உறுதிப படுத்தி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மல்லாகம் கோணப்புலம் முகாமிலுள்ள நபரொருவர் சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டில் தெல்லிப்பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜரப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து ஐந்து சைக்கிள்கள் மீட்கப்பட்டிருந்தன. இதில் இரு சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது சைக்கிள்களை பெற்றுச் சென்றுள்ளனர்.

இருப்பினும் மூன்று சைக்கிள்கள் எவராலும் உரிமை கோரப்படாது காணப்படுவதாகவும் இந்த சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி சைக்கிள்களை பெற்றுச்செல்லுமாறும் தெல்லிப்பளை குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## பொதுக்கூட்டம்

(தையிட்டி)

தையிட்டி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கப் புனரமைப்புப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் ஏழாம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வலி வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தையிட்டி கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவர்கள் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் 200 மலசலகூடங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனத்தின் (IFRC) நிதியுதவியுடன் பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான 200 மலசல கூடங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு வருட சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தில் அப்பிரதேச மக்களின் சுகாதார விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்பிரதேசத்தில் மலசல கூட வசதியற்ற குடும்பங்கள் இதன் மூலம் பயனடையவுள்ளன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளில் உள்ள மலசல கூடங்களைப் புனரமைத்துக் கொடுக்கவும், சில பாடசாலைகளில் புதிதாக அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இது தவிர அப்பிரதேச மக்களிடையே சுகாதார விடயங்களை மேம்படுத்தும் கருத்தரங்குகளும் நிகழ்த்தப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இத்திட்டத்தின் மூலமாக ஒரு வருட காலத்தில் இப்பிரதேசத்தின் சுகாதார விடயங்களை மேமபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## வாசிப்பு மாத நிகழ்வு

(வேலணை)

வேலணைப் பிரதேச மாணவர்களின் நலன் கருதி வாசிப்பு மாத நிகழ்வு கடந்த 25ஆம் திகதி வேலணைப் பிரதேச மண்டபத்தில் சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (85)

## உவர் நீர்த் தடுப்பணை பணிகளை விரைவில் பூரணப்படுத்தக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மண்டைதீவுக் கிராமத்தில் புனரமைக்கப்பட்டு வரும் உவர் நீர்த் தடுப்பரண் வேலைகளை விரைவில் முடித்துத் தருமாறு மண்டைதீவு கிராம கமக்காரர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நடவடிக்கை தாமதிக்கும் பட்சத்தில் அக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அவ்வமைப்பு எச்சிரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு அங்கு மேலதிகமாக 100 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நடவடிக்கைளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அங்கு சேதமடைந்திருந்த உவர் நீர்த் தடுப்பணை யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வந்தது.

இப்பணிகள் 95 வீதம் பூர்த்தியடைந்திருந்தபோதும் உவர் நீர்த்தடுப்ணையின் சுலுசு வேலைகள் முடிக்கப்படாததின் காரணமாக நேற்று முன்தினம் பெருக்கெடுத்த கடல் நீர் இவ் சுலுசுகளின் ஊடாக கிராமத்தின் வயல் நிலங்களில் மழை நீருடன் கலந்ததாக அக்கிராம கமக்காரர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் பெருக்கெடுக்கும் கடல் நீர் மீளவும் சுலுசு வழியாக கிராமத்தின் வயல் நிலங்களுக்குள் நுளையும் சாத்தியம் தென்படுவதாகவும் இதனால் நெற் பயிற்ச் செய்கை பாதிக்கப்படும் சாத்தியங்கள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சுலுசு வேலைகளைப் பூரணப்படுத்தி விவசாய நடவடிக்கைக்கு ஆவண செய்யுமாறு அக்கிராம விவசாயிகள் கோரியுள்ளனர்.

இதேவேளை, மண்டைதீவுக் கிராமத்தில் கடந்த ஆண்டு 50 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற் பயிர்ச் செய்கை பண்ணப்பட்டதும் அது விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தந்ததும் குறிப்பிடத்தக்கது. (பா)

## நீர்வேலி செல்வக்கதிர்காமத்தில் கந்த சஷ்டி விரத வழிபாடு

நீர்வேலி சிறி செல்வக்கதிர்காம சுவாமி திருக்கோயில் சிறிகந்தசஷ்டி வழிபாடு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. வரும் செவ்வாய்க்கிழமை வரை ஆறுநாட்கள் மிகச் சிறப்பாக வழிபாடு நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு இத்தலத்தில் புனருத்தாரண பணிகளுக்காக பாலஸ்தாப்னம் செய்திருப்பதால் வழமை போல விரத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. தினமும் சிறி வல்ல தேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்கு திருமஞ்சனமும், விசேட அர்ச்சனை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. சஷ்டியன்று காலை தொடக்கம் விசேட தமிழ்த் தோத்திர சமர்ப்பண நிகழ்ச்சி இடம்பெற்று ஆறுமாமுகத் தண்ணல் அலங்கார தரிசனம் அளிப்பார். மறுநாள் பாறணை நிகழ்ச்சியுடன் இவ்விரத வழிபாடுகள் நிறைவு பெறவுள்ளன. இக் காலப்பகுதியில் புராண படன நிகழ்வும் வழமை போல நடைபெறும்.






திவி நெகும திட்டத்தின் இரண்டாம் நிலை விதை நடுகை நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை 9.59 மணியளவில் இடம்பெற்றபோது, ஆரம்ப நிகழ்வின்போது கலந்துகொண்டோரையும் நல்லூர் பிரதேச சபை எதிரக் கட்சித் தலைவரும் ஈ.பி.பி.டி அமைப்பாளருமான ரவீந்திரதாசன், நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில்நந்தனன் மற்றும் உதவி பிரதேச செயலாளர் சோதிநாதன் ஆகியோர் விதை நடுவதையும் காணலாம். - எஸ

# சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மூலம் கிராமப் பிணக்குகளைத் தீர்க்கலாம்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

(நல்லூர்)

கிராமங்களில் ஏற்படும் பிணக்குகளை சிவில் பாதுகாப்புக் குழுக்களின் உதவியுடன் எதிர்காலத்தில் குறைத்துக் கொள்ள முடியுமென ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

பிரதேச மட்ட சிவில் பாதுகாப்புக் குழுவிற்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டத்தை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராம மட்டங்களில் பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக எழுத்து மூலமான முறைப்பாட்டினை பிரதேச மட்ட குழுவிற்கு அறிவிக்க முடியும். இதை நாம் பரிசீலித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஆகியோரின் வழிகாட்டலுடன் பொலிஸாரினது உதவியைப் பெற்று தீர்த்து வைக்க முடியும் என்றார்.

பிரதேச பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகளை விபரித்து பிரதேசச் செயலர் பா.செந்தில்நந்தனன், மேற்படி பாதுகாப்புக் குழுக்களில் திணைக்களத் தலைவர்கள் உட்பட சிவில் பிரமுகர்கள் அங்கம் வகிப்பார்கள் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் இக் குழுவிற்கான தலைவராகச் செயற்பாடுவாரெனவும், செயலாளராக பிரதேச செயலரும், ஒருங்கிணைப்பாளராக பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளும் கடமையாற்றுவர் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு அரியாலை ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் நடைபெறும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் கோப்பாய், யாழ்ப்பாணம் பிரிவு பொலிஸ் அதிகாரிகள், உதவிப் பிரதேச செயலர் சோதிநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், ஆட்டோ மற்றும் சிற்றூர்திச் சங்க உறுப்பினர்கள், இலங்கை மின்சார சபை அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (26)



## அபிவிருத்தி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலக அபிவிருத்தி தொடர்பான கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் அனைத்துப் பிரதேச செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# வேலணைப் பிரதேச செயலகத்தில் விதைகள் நடுகை




(தீவகம்)

விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை நடும் தேசிய திட்டம் நேற்றுக் காலை வேலணைப் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வு சுபநேரம் 9.59 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வேலணைப் பிரதேச செயலக வளாகத்தில் ஊடுபயிர் விதைகள் கலந்துகொண்டிருந்த விருந்தினர்களால் விதைக்கப்பட்டன.

இதில் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா (போல்), உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரி.மீரா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அருள்ராஜ், வேலணை வைத்தியசாலை வைத்திய அதிகாரி கே.பாலச்சந்திரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(85)

# நாவலடியில் 12 குடும்பங்களுக்கு சூரிய மின்கலத் தொகுதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை, நாவலடிக் கிராமத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 12 குடும்பங்களுக்கு மலேசியா நிறுவனம் 4 மின்விளக்குகள் பொருத்தக்கூடிய சூரிய மின்கலத் தொகுதியினை வழங்கியுள்ளது.

இந்தச் சூரிய மின்கலத் தொகுதி மூலம் நாம் பெரிதும் பயனடைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் பெற முடியாத இக்கிராமத்தில் மேர்சி மலேசியா நிறுவனத்தின் இந்த உதவி தமக்குப் பெரிதும் நன்மையாக அமைந்துள்ளதாகவும், குழந்தைகளின் கல்விக்கு இது பெரும் நன்மையை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இக்கிராமத்தில் இருக்கும் கிணறுகளை புனரமைத்துக் கொடுத்ததுடன், புதிய கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டிருந்தது. (எஸ்)

# அன்புமயமான எண்ணங்களினால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு வருடம் தோறும் ஒக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தை காருண்ய உணர்வுகள் நிறைந்த அன்பு வாரமாகக் கொண்டாடி வருகிறது. இக்காலப் பகுதியில் எம்மில் ஏற்படுகின்ற மாற்றம் அன்பு மயமான எண்ணங்கள் தொடர்ந்தும் எமது வாழ்க்கை யின் அடித்தளமாக அமைந்து சமூகத்தில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்த நாம் ஒவ்வொருவரும் எம்மாலான செயற்பாடுகளைச் செய்வோம் என சத்திய சாயி மனித மேம்பாடுக் கல்வி இணைப்பாளர் கே.வி.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இவ்வாரத்தில், நமது குடும்பத்தில், நாம் பணிபுரியும் வேலைத்தளங்களில், சமூகத்தில், நமது பணிகள் ஒவ்வொன்றிலும் அன்புணர்வை வெளிப்படுத்துவோம். அன்பைத் தீவிரமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு அன்பின் சக்தியை மற்றவர்கள் உணரத்தக்க விதமாக நாம் ஒவ்வொருவரும் நடந்து கொள்வோம்.

உலக மாற்றம் தனி மனிதனில் ஏற்படக்கூடிய மாற்றத்தில் தங்கியுள்ளது. அன்பு உலகை அழிவிலிருந்து காப்பாற்றும். அன்பு வாரத்தில் நாம் பின்பற்றுகின்ற காருண்ய உணர்வுகள் தொடர்ந்தும் எமது வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்து நாட்டில் அமைதி தோன்றிட வழி வகுப்போம். அன்பான எண்ணம், இனிமையான பேச்சு, நல்ல நடத்தை இவை தான் உண்மைக் கல்வி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




நாங்க எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி போட்டுத்தான் எழுதத் தொடங்குவம். பிள்ளையாரை நினைத்தோ, வணங்கிக் கொண்டோ செய்யப் போகிற காரியங்கள் வெற்றியாக முடியுமெண்டதும் ஐதீகம். ஆனால் பிள்ளையாருக்குத்தான் பொம்புளை இன்னும் கிடைக்காமல் சந்தி வழிய காத்திருக்கிறார் எண்டும் சொல்லுவினம்.

அதுதான் போகுது பிள்ளையாற்றைகையை உடைச்சுப் போட்டு வேலியோரம் போட்டுக்கிடந்த காரியமும் கிட்டடீல கஸ்தூரியார் வீதியில நடந்ததெண்டும் பேப்பரில போட்டவை.

இப்ப பேப்பர்களில பொலிஸாரால் குடுத்த செய்தியும் போடுகினம். பிள்ளையார் சிலைகள் அகப்பட்டுள்ளன வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளும்படி.

இதைப் பாக்கேக்கதான் கலாநிதி ஆறுதிருமுருகன் பக்தியின் மொழி தமிழ் நூல் வெளியீட்டின் போது கூறியது ஞாபகத்துக்கு வருகுது. இந்து விக்கிரகங்களின் களவுகளைப் பற்றிப் பொலிஸில் முறைப்பாடு பதிய ஏலாமல் இருக்குதெண்டு.

அதுக்கவர் கூறிய காரணம் நூறு, நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பாக வார்க்கப்பட்ட அந்த விக்கிரகங்களின் செய்மாதிரிகளை இப்ப உள்ளவர்களால் விபரிக்கும் அறிவில்லை எண்டதுதான்.

பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்கான கதை எண்டும் சொல்லுறவை. அதனாலதானோ என்னவோ குடும்பங்களுக்கு பிள்ளையார் வைக்க சாணத்தை உருட்டி அதில் அறுகம்புல்லை வைக்கின்ற நிலை தோன்றியது. ஆறுதிருமுருகன் சொன்னது பிள்ளையாரின் துந்திக்கை வலம்புரியாகவோ, இடம்புரியாகவோ அமைந்துள்ளது என்பது பற்றித்தான. தட்டாதெரு அரசடிப் பிள்ளையார் கோயிலில் களவுபோனது நூறு வருடங்களுக்கு முன்பாக வார்க்கப்பட்ட 25 கிலோ ஐம்பொன் சிலையெண்டு ஆலயத் தலைவர் சொன்னார்.

சிலைகளைக் கள்ளர் உடனே உருக்கிப் போடுவாங்கள் எண்டு சொன்னதுக்கு சிலைகளை உருக்காமல் கள்ளர் உருப்படியாகவே தமிழகத்துக்குக் கடத்தி விடுவதாகவும் சொன்னார். இதனாலதான் குட்டிப் பிள்ளையார் ஆலயப் பிள்ளையாருக்குக் கையை உடைக்க வேண்டி ஏற்பட்டதெண்டு என்ர சின்ன மூளேல பட்டது.

அது ஐம்பொன் சிலையா அல்லது சிமெந்துச் சிலையா எண்டதை அறியப் பிள்ளையாரின் கையேபோச்சு, அது சிமெந்தெண்டு அறிஞ்சதும் கள்ளர் வேலி ஓரமாகப் எறிஞ்சு போட்டாங்கள்.

இப்ப பொலிசில மாட்டுப்பட்டுள்ள பிள்ளையாரை மீட்கிறேண்டா சொன்னது போல சிலை ஆக்கத்தின் சூத்திரம் அறிஞ்சாத்தான் முடியும். அம்மன் மற்றும் ஐயனார் கிருஷ்ணர், முருகன், சிவபெருமான் சிலைகளும் களவாடப்பட்டுள்ளது. ஆனால் பிள்ளையாரின் சிலை மட்டுந்தான் பொலிசில மாட்டுப்பட்டுக் கிடக்கு.

இதுவரை அதுகள் ஒண்டும் புடிபடேல்ல. அப்ப அதுகளெல்லாம் கடல் கடந்திட்டேண்டுதான் அர்த்தம். தாயைப்போல பெண் வேணு மெண்ட காலமெல்லாம் சந்திகளில தாக்கர கால்களை மடிச்சுப்போட்டுக் கொண்டு காத்து இருக்கிற பிள்ளையாருக்கும் சித்தி முத்தியெண்டு ரெண்டு பொம்புளையள் இருக்காமே! பிள்ளையாரும் பலே ஆள்த்தானே போங்கள்!

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(28.10.2011 – வெள்ளிக்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்
ஐப்பசி 11 ஆம் நாள்.
இராகுகாலம் 10.33–12.03,
சுபநேரம் 06.03 –7.33,
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 7.58 வரை
திதி: துதியை மு.இ. 10.04 வரை

### இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:–** பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, திடீர் பயணம், உடல் உபாதை.

**ரிஷபம:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், கெட்ட செய்தி, தொழில் மந்தம், தேகசுகம் பாதிப்பு.

**மிதுனம் :–** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், திடீர் பயணம், அயலார் தொந்தரவு, நினைத்தை சாதித்தல்.

**கடகம்:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், வசதிக்குறைவு, வெளிநாட்டு உதவி, அதிகாரப் போட்டி.

**சிம்மம்:–** காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுற்றத்தார் ஆதரவு, புதுப் பொருள் சேர்க்கை, நண்பர் வருகை.

**கன்னி :–** குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், அதிகாரிகள் கோபம், மனச்சஞ்சலம், உடல் உபாதை.

**துலாம் :–** காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, சில முக்கிய முடிவுகள், தேக ஆரோக்கியம்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், சுபகாரியப் பேச்சு, நினைத்ததைச் சாதித்தல், உடல் உபாதை.

**தனுசு:–** காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச்சஞ்சலம், கடன் வாங்குதல், நண்பர் உதவி.

**மகரம:–** குடும்பத்தில் கவலை, பணக கஷ்டம், உறவினர் வருகை, வீணாக ஆத்திரப்படல், தொழில் முடக்கம்.

**கும்பம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், மனமகிழ்ச்சி, நினைத்ததைச் சாதித்தல், தேக ஆரோக்கியம்

**மீனம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், நண்பர் வருகை, உடல் உபாதை, தொழில் லாபம்.

# மாவட்ட மட்ட கூடைப்பந்து இறுதி ஆட்டங்கள் இன்று

ஜொலிஸ்ரார் அணி



சென்றலைஸ் சொக்ஸ்



பமிலியஸ் அணி



பட்டர்பிளஸ் அணி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இன்றைய இறுதி ஆட்டங்களில் ஜொலிஸ்ரார், சென்றலைஸ் சொகஸும் மற்றும் பட்டர்பிளஸ், பமிலியனும் மோதவுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301V அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதன் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. முதலாவது அரையிறுதியில் ஜொலிஸ்ரார் அணியும், காங்கேசன்துறை ஐக்கியம் அணியும் மோதின. இதில் 45-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜொலிஸ்ரார் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்றலைஸ் சொக்ஸ் அணியும், பற்றிசீயன்ஸ் அணியும் மோதின. இதில் சென்றலைஸ் சொக்ஸ் அணி 103-59 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் பட்டர்பிளஸ் அணியும், கே.சீ.சீ.சீ. அணியும் மோதின. இதில் பட்டர்பிளஸ் அணி 26-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஏற்கனவே, பமிலியஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரு பிரிவுகளுக்குமான இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது. பெண்களுகான இறுதிப் போட்டி மாலை 5.00 மணிக்கும், அதனைத் தொடர்ந்து ஆண்களுக்கான இறுதிப் போட்டி நடைபெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலக ஊழியர்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி தகுதி பெற்றுள்ளது.

15 பிரதேச செயல அணிகள் மற்றும் மாவட்ட செயலக அணி ஆகிய 16 அணிகளுக்கிடையிலான 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது.

இதில் முதல் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும், கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கரவெட்டி பிரதேச செயலக அணி 14.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இரண்டாவது போட்டியில் காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணி மோதின. முதலில் ஆடிய காரைநகர் பிரதேச செயலக அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய சாவகச்சேரி பிரதேச செயலக அணி 11.3 ஓ்வர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

மூன்றாவது போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும், தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதன. முதலில் ஆடிய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சங்கானை பிரதேச செயலக அணி 14.1 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்து.

நான்காவது போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணிக்கும் சாவகச்சேரி பிரதேச செயல்க அணிக்கும் இடையில் இடம்பெற்றது. முதலில் ஆடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சாவகச்சேரி பிரதேச செயலக அணி 14.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

ஐந்தாவது போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியும் வேலணை பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய நல்லூர் பிரதேச செயலக அணி 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வேலணைப் பிரதேச செயலக அணி 13.5 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

ஆறாவது போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய உடுவில் பிரதேச செயலக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 13.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

ஏழாவதாக நடைபெற்ற போட்டியில் மாவட்ட செயலக அணியும், மருதங்கேணி பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய மாவட்ட செயலக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மருதங்கேணி பிரதேச செயலக அணி 9.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும், யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய யாழ்ப்பாண பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய ஊர்காவற்றுறை அணி 13 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிக்கும் மாவட்ட செயலக அணிக்கும் இடையில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் முதலில் ஆடிய மாவட்ட செயலக .அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 13.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

அடுத்த காலிறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் நெடுந்தீவு பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய நெடுந்தீவு அணி 11.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதின. முதலில் ஆடிய சங்கானை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இவ்வெற்றியின் மூலம் சங்கானை பிரதேச செயலக அணி இறுதிப் போட்டியில் மோதும் தகுதியைப் பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மாவட்ட செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்

# ஒவ்வொரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், ஹென்றியரசர் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் இரு கல்லூரிகளுமே ஒவ்வொரு பிரிவில் வெற்றிபெற்றுள்ளன.

இப்போட்டி நேற்று முன்தினம் ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது.

14, 16, 18, 20 ஆகிய நான்கு வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் மிகவும் அபாரமாக ஆடிய ஹென்றியரசர் கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு கல்லூரி அணிகளும் சிறப்பாக ஆடியதால் கோல் எதனையும் போட முடியாமல்போக ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

18 வயதுப் பிரிவில் அணிகளுக்கிடையிலான போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சிறப்பாக ஆடி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 20 வயதுப் பரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில இறுதி வரை இரு அணிகளுமே கோல் எதனையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

நான்கு பிரிவுகளில் இடம்பெற்ற இப்போட்டிகளில் இரு கல்லூரி அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளது. (93)

# தேசிய மட்ட பாடசாலைகள் கராத்தே வெண்கலம் வென்றார் தமிழ்ச்செல்வன்

(யாழ்ப்பாணம்)


இலங்கை பாடசாலைகள் கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் தும்பளை சிவப் பிரகாச பாடசாலை மாணவன் எஸ். தமிழ்ச்செல்வன் மூன்றா மிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கான தேசிய மட்ட கராத் தேப் போட்டி கடந்த 20,21ஆம் திகதிகளில் கொழும்பு சுகதாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

பாடசாலைகள் கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இப்போட்டி 11-13, 13-15, 15-17, 17-19 வயதினருக்கு மட்டும் நடத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு பிரிவிலும் சுமார் 120 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் யாழ். மாவட்ட பாடசாலைகள் சார்பாக பருத்தித் துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் ஆழிக்குமரன் மற்றும் தும்பளை சிவப்பிரசாக பாடசாலை மாணவன் தமிழ்ச் செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.


சண்டை, கட்டா, தனிக் காட்டா, குழுக் கட்டா போன்ற போட்டி கள் இடம்பெற்றது. இதில் 14 வயதுப் பிரிவு சண்டைப் போட்டியில் தும்பளை சிவப்பிரகாச பாடசாலை மாணவன் எஸ். தமிழ்ச் செல்வன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் இ. ஆழிக்குமாரன் 13 வயதுப் பிரிவு சண்டைப் போட்டியில் சிறந்த எட்டு வீரர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.



தமிழ்ச்செல்வன்

ஆழிக்குமாரன்

## இரண்டாவது சுற்றில்



(செயின்ட் பீட்டர்ஸ்பர்க்)

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ஓப்பன் ரென் னிஸ் தொடரின் முதல் சுற்றில், இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் வெற்றி பெற்றார்.

ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரில், ஏ.டி.பி., ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், சுலோவோக் கியாவின் கரோல் பெக்கை எதிர்கொண்டார்.

இதில் அபாரமாக ஆடிய சோம்தேவ் 6-2, 6-3 என்ற நேர் செட்டில் மிகச் சுலப மாக வெற்றி பெற்று இரண்டாவது சுற் றுக்கு முன்னேறினார். இரண்டாவது சுற் றில் சோம்தேவ், குரோஷியாவின் மரின் சிலிக்கை சந்திக்க உள்ளார்.

# தரப்படுத்தலில் ஏழாம் இடம் அதிர்ச்சி என்கிறார் மிஸ்பா



(டுபாய்)

ஐ.சி.சி ருவென்ரி-20 போட்டிக்கான புதிய தரவரிசைப் பட்டியலில் பாகிஸ் தான் அணிக்கு ஏழாவது இடம் அளித் திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது என கப்டன் மிஸ்பா தெரிவித்துள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் போட்டிக்கான தர வரிசைப் பட்டியலை தொடர்ந்து, சர்வதேச ருவென்ரி-20 போட்டிக்கான தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி சமீபத்தில் வெளி யிட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தரவரிசைப் பட்டியலில் பாகிஸ் தான் அணிக்கு ஏழாவது இடம் அளித் திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. கடந்த 2008இல் நடந்த முதலாவது ருவெனரி-20 உலக கிண்ணத் தொடரில் பாகிஸ் தான் அணி இரண்டாவது இடம் பிடித்தது.

கடந்த 2009இல் சம்பியன் பட்டம் வென்றது. கடந்த ஆண்டு அரையிறுதி வரை முன்னேறிய பாகிஸ்தான் அணி இதுவரை 48 போட்டியில் பங்கேற்று 29இல் வெற்றி பெற்று உள்ளது. இருப் பினும் பட்டியலில் பின்னடைவை சந்தித் திருப்பது ஏமாற்றமாக உள்ளது.

கடைசியாக விளையாடிய சர்வதேச ருவென்ரி-20 போட்டியில் 13இல் தோல்வி கண்டிருப்பதே இப்பின்னடைவுக்கு காரணமாக இருக்கலாம். எனவே அடுத்து வரவுள்ள ருவென்ரி-20 போட்டி யில் கூடுதல் கவனம் செலுத்தி வெற்றி பெற போராடுவோம். தரவரிசைப் பட்டிய லுக்கு முக்கியத்துவம் கொடுத்து திட்ட மிட்டு விளையாட வேண்டும். தற்போது அனைத்து வகைப் போட்டிகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றோம். இது போன்ற செயற்பாடுகள் தொடர்ந் தும் நீடிக்கப்படும் பட்சத்தில் முதல் நிலை அணியாக உருவாக முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வே த்ரில் வெற்றி



(புலவாயோ)

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணி 329 ஓட்டங்களை விரட்டி வென்று சாதனை யுடன் கூடிய வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, சிம்பாப்வே அணி களுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியு மான ஒரு நாள் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை புலவாயோவில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசி லாந்து அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 328 ஓட்டங்ககளைக் குவித்தது. தலைவர் ரோஸ் டெய்லர் 119, வில்லியம்சன் 100 ஓட்டங்களைப் பெற்றர். இதில் வில்லியம்சன் 93 ஓட்டங் களில் இருந்த போது ஆட்டத்தின் கடை சிப் பந்தை சந்தித்தார். அது நோபோ லாக அமை பவுண்டரியாக மாற்றினார்.. இதன் பின்னர் மீண்டும் வீசப்பட்ட கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்து தனது 2ஆவது சதத்தை நிறைவு செய்தார.

அடுத்து ஆடிய சிம்பாப்வே அணி, நியூசிலாந்துக்கு பதிலடி கொடுத்தது. சிம்பாப்வேயின் விஸ்வரூபம் நியூ சிலாந்து பந்துவீச்சாளர்களை திகைக்க வைத்தது. இதன் பின்னர் ஒரு பக்கம் விக்கெட் சரிந்தாலும், மறுபுறம் மல்கம் வொலெர் நியூசிலாந்து பந்து வீச்சாளர் களுக்கு சிம்மசொப்பனமாக விளங் கினார்.

இறுதியில் சிம்பாப்வே அணி 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 329 ஓட்டங் கள் குவித்து ஒரு விக்கெட் வித்தியா சத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இதில் வொலெர் ஆட்டமிழக்காது 99 ஓட்டங் களைப் பெற்றார். மற்றும் தலைவர் பிரன் டன் டெய்லர் 75, தைபு 53, சிகும்புரா 47 ஆகியோர் தங்கள் இலக்கை நோக்கி முன்னேற உதவினர். ஒருநாள் போட்டி வரலாற்றில் சிம்பாப்வே அணியின் இரண் டாவதாகத் துடுப்பாடி வெற்றியிலக் கைக் கடந்த பெரிய வெற்றியாகப் பதி வாக்கியது. இதற்கு முன்பு அதிகபட்ச மாக 290 ஓட்டங்களை வெற்றிகரமாக துரத்திப் பிடித்திருக்கிறது.

இப்போட்டியில் சிம்பாப்வே வெற்றி பெற்றாலும் தொடரை நியூசிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிவிட்டது. அடுத்து இரு அணிகள் இடையே ஒரே ஒரு டெஸ்ட் போட்டி எதிர்வரும் 1ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் சுற்றில் வெற்றி



(பரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் முதல் சுற்றில் இந்திய வீராங்கனை செய்னா நேவல் வெற்றி பெற்றார்.

பிரான்ஸ் தலைநகர் பரிசில், பிரெஞ்ச் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் செய்னா நேவல், நெதர்லாந்தின் ஜிய் யோவை எதிர் கொண்டார். இதில் அபாரமாக ஆடிய செய்னா 21-14, 21-9 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சேட்டன் ஆனந்த், பிரான சின் பிரைஸ் லவர்டசை எதிர்கொண்டார். இப்போட்டியின் முதல் செட்டை பிரான்ஸ் வீரர் 21-13 எனக் கைப்பற்றினார். காயம் காரணமாக இரண்டாவது செட்டில் இருந்து சேட்டன் ஆனந்த் விலகினார். இதனால் பிரைஸ் லவர்டஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.



மெக்சிக்கோவில் நடைபெறும் பெண்களுக்கான அமெரிக்க கால்பந்துத் தொடரின் அரையிறுதியில் பிரேசில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோ அணியை வீழ்த்தியது. இதன்போது பந்தை தட்டிச் செல்லப் போராடிய இரு அணி வீராங்கனைகளையும் காணலாம்.

## தொடரைத் தீர்மானிக்கும் முக்கிய போட்டி இன்று

(கேப்டவுன்)

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரைத் தீர்மானிக்கும் முக்கியமான ஒரு நாள் போட்டி இன்றைய தினம் இடம்பெற வுள்ளது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டி களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டு போட்டிகளிலும் இரு அணி களும் ஒவ்வொரு வெற்றியைப் பதி வாக்கியுள்ளன.

இந்நிலையில் தொடரைத் தீர்மா னிக்கும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்றைய தினம் இடம்பெற வுள்ளது.

தொடரை வெல்ல இரு அணிகளுமே கடுமையாகப் போராடும் என்றும், உள் ளூரில் இடம்பெறுவதால் தென்னா பிரிக்கா அணிக்கே தொடரை வெல்ல அதிக வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.



# துமிந்த சில்வாவின் உடல் நிலையில் முன்னேற்றம்

(கொழும்பு)

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தற்போது வைத்தியர்களுடன் உரையாடுவதாக சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வைத்தியர்கள் வினவும் கேள்விகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெளிவாக பதிலளிக்கின்றார் என, அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் விசேட நிபுணர் வைத்தியர் மஹேமி விஜேரத்ன தெரிவித்தார். தற்போது துமிந்த சில்வாவிற்கு சோறு போன்ற இலகு உணவு வகைகள் வழங்கப்படுவதாக விசேட நிபுணர் கூறினார்.

இன்னும் நான்கு மாதங்களுக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வழமையான சுகாதார நிலைக்குத் திரும்புவார் என வைத்தியர் மஹேமி விஜேரத்ன குறிப்பிட்டார். எவ்வாறாயினும், நாடாளுமன்ற உறுப்பினரின் தலையிலிருந்து அகற்றப்பட்ட பகுதியை இணைப்பதற்கான சத்திர சிகிச்சை இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

அந்த சத்திரசிகிச்சையை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் விசேட நிபுணர் வைத்தியர் மஹேமி விஜேரத்ன தெரிவித்தார்.

# மன்னாரில் ஹெரோயின்

(கொழும்பு)

தலைமன்னாரில் வீடொன்றில் பதுக்கிவைத்திருந்த ஒன்றரை கிலோ எடை கொண்ட ஹெரோயின் போதைப் பொருளை கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைப்பற்றியதுடன் நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமிலுக்கு கிடைத்த இரகசியத் தகவலினைத் தொடர்ந்து ஏ.எல்.எம். ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தலைமன்னார் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றை சோதனையிட்டனர். இதன் போது வீட்டில் உள்ள அலுமாரி ஒன்றினுள் மறைத்து வைத்திருந்த ஹெரோயின் போதைப்பொருள் கைபற்றப்பட்டது.

# தங்கம் கடத்தல் மூன்று பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வெளிநாடுகளுக்கு தங்க நகைகளைக்கடத்த முயற்சித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டுகோடி ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளை கடத்திவந்தமேற்படி மூன்று பேரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில்வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இந்தியாவுக்கும், ஒருவர் சிங்கப்பூருக்கும் செல்வதற்கு தயாராக இருந்தனர். அத்துடன் அவர்களது கைப்பையிலேயே குறித்த தங்க கட்டிகளையும் வெளிநாட்டு நாணயத்தாள்களையும் வைத்திருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் கிராண்ட்பாஸ் மற்றும் வெல்லம்பிட்டிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்புடன் அரசின் பேச்சுவார்த்தை காலத்தைக் கடத்தும் கபட நாடகம்

## கடும்தொனியில் சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

**கூட்டமைப்புடனான அரசின் பேச்சுக்கள் காலத்தை இழுத்தடிக்கும் நாடகம் என்று அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.**

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்திடம் உண்மைத்தன்மை இல்லை எனவும், தமிழ்தேசியகூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்துவது காலத்தை இழுத்தடிக்கும் முயற்சியேயாகும் என்று ஐக்கியதேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் தடுக்கப்படக்கூடிய விஜயம் அல்ல கூட்டமைப்பினர்


தமது மக்களின் குறைகளை தெளிவுபடுத்துவது அவர்களின் ஜனநாயகக் கடமை என்று ஐக்கியதேசிய கட்சி சார்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கியதேசிய கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்குகொள்ளும் அரசாங்கம் சர்வதேச ரீதியாக எழுகின்ற சவால்களுக்கு முகம்



கொடுப்பதற்கும், எழுகின்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் தன்னை தயார் படுத்தவேண்டியது அவசியம். சர்வதேச நாடுகளை பகைத்துக்கொள்வதில் பலன் இல்லை. என்றும் தெரிவித்தார்.

# மனித உரிமைகளைப் பாதுகாக்க விசேட செயற்திட்டம் விரைவில்



(கொழும்பு)

நாட்டில் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலான விசேட செயற்திட்டம் ஒன்று நாடுமுழுவதிலும் மிக விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும் ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியதும்,மனித உரிமைகளை காக்கும் இந்த விசேட திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவற்றை ஊக்குவிப்பதற்கும் தயாரிக்கப்பட்ட இந்த தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சிவில் மற்றும் அரசியல், சமூக,பொருளாதார, கலாச்சார உரிமைகள், சித்திரவதைகளில் இருந்து மீள்தல், பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை, தொழிலாளர்,இடம்பெயர்ந்தவர்கள் உரிமைகள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதி ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளைக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# முல்லேரியா கொலைச் சம்பவம் பங்குச்சந்தை வா்த்தகத்தில் சரிவு

## முக்கூட்டுத் தொடர்பு அம்பலம்

(கொழும்பு)

முல்லேரியாச் சம்பவம் நாட்டின் பங்குச்சந்தை வர்த்தகத்தை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும் மேற்படி கொலைச் சம்பவம் வெளிவராத பல இரகசியங்களை வெளிச்சத்துக்கக் கொண்டு வந்துள்ளதாக பி.பி.சியின் சந்தேஷியா என்ற சிங்கள சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திர கொல்லப்பட்ட முல்லேரிய சம்பவத்திற்கும்,கொழும்பு பங்குச் சந்தை நிலைமைக்கும், சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக ரி.என்.எல். தொலைக்காட்சியின் உரிமையாளரான ஷான் விக்கிரமதுங்க தெரிவித்ததாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது இத்தொடர்புகள் குறித்து தான் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் வெளிப்படுத்திய பின் தனக்கு கொலை மிரட்டல்கள் வந்ததாகவும் ஷான் விக்கிர மதுங்க பி.பி.சி சந்தேஷியாவிடம் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் எனக்கூறப்படுபவர்களால்கொல்லப்பட்ட பின்னர் மேற்படி தொடர்பு அம்பலமாகியுள்ளது என பி.பி.சி சந்தேஷியவின் செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவும் தலையில் காயமடைந்த இச்சம்பவத்தையடுத்து போதைப்பொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வேறு சில ஊடக அறிக்கைகள் தெரிவித்தன சந்தையில் சட்டவிரோத போதைப்பொருள் இல்லாத நிலையில் பங்குச்சந்தையும் சரிந்துள்ளது என விக்கிரமதுங்க விளக்கினார். இதை நாம் ஆராய்ந்தபோது போதைப்பொருள் சந்தைக்கும் இப் பங்குச்சந்தைக்கும் தொடர்புள்ளதை நாம் அவதானித்தோம் என அவர் மேலும் கூறினார்.

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு நிராகரிப்பு புலம்பெயர்ந்த மக்கள் ஏமாற்றமாம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது அவுஸ்ரேலிய நீதிமன்றில் கொடுக்கப் பட்ட வழக்கை அந்த நாட்டின் சட்ட மா அதிபர் திணைக்களம் நிராகரித்து விட்டது. இதனால் அவுஸ்ரேலியாவில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஜனாதிபதி மீதான வழக்கு நிராகரிக்கப்பட்டது அவுஸ்ரேலிய தமிழ்ச் சமூகத்தை அதிர்ச்சியடைய வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இலங்கை ஜனாதிபதி மீது அவுஸ்ரேலிய தமிழரொருவர் தொடர்ந்த வழக்கை ஏற்றுக்கொள்ளமுடியாது என அவுஸ்ரேலிய சட்டமா அதிபர் மறுத்திருந்தார். அவுஸ்ரேலிய அரசின் இந்த முடிவு தமக்கு பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக அவுஸ்ரேலிய தமிழ் காங்கிரசின் பெண் பேச்சாளர் சாம்பரி கருத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதிக்கெதிரான போர்க்குற்ற வழக்கு அனைத் துலக சட்டங்களை மீறியது என்று அவுஸ்ரேலிய சட்டமா அதிபர் கூறியிருப்பது தவறானது என முன்னாள் அவுஸ்ரேலிய இராஜதந்திரியான புரூஸ் ஹை தெரிவித்துள்ளார்.

மேலும் அவுஸ்ரேலிய சட்டம் பற்றியோ அனைத்துலக சட்டம் பற்றியோ அவர் பார்க்கவில்லையென்றும், கொமன்வெல்த் மாநாட்டின் சூழ்நிலை கருதி அரசியல் ரீதியாகவே முடிவெடுத்துள்ளார் என்றும் புரூஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறித்த வென்வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதிசெய்து பின்வருவனவற்றை உரிய இடங்களில் காட்டுக.

1) இருநாட்களிலும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?
2) சனிக்கிழமை மாத்திரம் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை என்ன?
3) 11ஆம் தரத்தில் உள்ள மாணவர் மொத்த எண்ணிக்கை 124 எனின், ஒரு நாளேனும் சிரமதானத்தில பங்குபற்றாத மாணவர் தொகையைக் காண்க.


32. ஒரு வகுப்பு மாணவர் கணித பாடப் பரீட்சை ஒன்றில் பெற்ற புள்ளி விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தப்பட்டுள்ளன.

| புள்ளி வகுப்பாயிடை | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 | 70-80 | 80-90 | 90-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 1 | 3 | 5 | 9 | 12 | 8 | 5 | 3 | 2 | 2 |

1) திரள் மீடிறன் அட்டவணை ஒன்றைத் தயாரிக்கவும்.
2) திரள் மீடிறன் வரைபு வரைக.
3) வரைபிலிருந்து இடையம் யாது?
4) விசேட சித்திக்கான குறைந்த புள்ளி 75 எனின், சித்தி பெறுவோர் எண்ணிக்கை யாது?

33. $2x - y = 1$
$x + y = 8$ என்னும் ஒருங்கமைச் சமன்பாட்டு சோடியைத் தீர்க்குக.

34.




முக்கோணி ABC இன் பக்கம் BC நீளம் (4x -1) அலகுகள், A யிலிருந்து BC இற்கு வரையப்பட்ட செங்குத்து உயரம் 3x அலகுகள். முக்கோணி பரப்பு 90 சதுர அலகு ஆகும்.

1) இத்தரவுகள் x இலான இருபடிச் சமன்பாடு ஒன்றை உருவாக்குக.
..............................................................
2) அதிலிருந்து AB இன் நீளத்தைக் காண்க.
..............................................................

35. சுருக்குக. $27^{2/3} X 9^{1/2}$
..............................................................

36. log3 = 0.4771 lg7 =0.8451 என்னும் பெறுமானங்களை மாத்திரம் பயன்படுத்தி lg (4 2/7) இன் பெறுமானம் காண்க.
..............................................................

37. $\lg\sqrt{x} = 1/2$ எனின் x இனைக் காண்க.
..............................................................

38. வர்த்தகர் ஒருவர் சைக்கிள் ஒன்றை ரூபா 6000 இற்கு கொள்வனவு செய்கின்றார். அவர் 12 வீத இலாபத்தை வைத்துக் கொண்டு அதனை விற்பதற்கு விலை குறிக்கின்றார்.


1) சைக்கிளை விற்பதற்கு குறித்த விலை யாது?
2) விற்கும்போது 10 வீதக் கழிவு கொடுபடுமெனின் அது விற்கப்படும் விலை யாது?
3) இலாபத்தைக் காண்க.
4) சைக்கிளை விற்பதன் மூலம் அவருக்குக் கிடைக்கும் இலாபத்தைக் கொள்விலையின் சதவீதமாக எடுத்துரைக்க.



# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 1 மணி

பிரபல ஆசிரியர்



# கல்வி முரசு




## கணிதம் -I பகுதி A

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

01. 3 மனிதர் 4 நாளில் செய்யும் ஒரு வேலையை ஒரு மனிதன் செய்யத் தேவையான நாட்கள் எத்தனை?
..............................................................

02.





உருவில் செவ்வகம் ABCD இன் சுற்றளவு யாது?
..............................................................
..............................................................

03. $(x-y)^2$ இன் விரிவைத் தருக.
..............................................................

04. தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கு ஆகும். மகனின் வயது t வருடம் எனின் தந்தையின் வயது யாது? (t இல் தருக)
..............................................................

05.





$\triangle ABC$ இல் $B\hat{A}C$ செங்கோணம். $x^0$ ஐ கணிக்க.
..............................................................
..............................................................

06. ஏறுவரிசையில் தருக. 5/8, 5/7, 5/9
..............................................................


07. $(-2)^7$ இன் பெறுமானம் காண்க.
..............................................................

08.





நிழற்றியதன் குறியீடு யாது?
..............................................................
..............................................................
..............................................................

09.





சதுரமுகியின் கனவளவு யாது?
..............................................................
..............................................................
..............................................................

10. 

உருவில் ஒருங்கிசைவான △ சோடியை காரணத்துடன் தருக.


11. காரணிப்படுத்துக. $(a - b)^2 - a + b$

12. $x = 5,\ t = -3$ எனின் $2x^2 - 3t$ என்னும் கோவையின் பெறுமானத்தைக் காண்க.

13. 

உருவில் x° இன் பெறுமானத்தைக் காண்க.

14. தீர்க்க. $3x - 2(x-2) = 5$

15. 

A யிலிருந்து B இன் திசைகோள் 038° எனின் B யிலிருந்து A இன் திசைகோள் யாது?

16. சுருக்குக. $1/a + 3/2a$

17. பின்வரும் விருத்தி எவ்வகை விருத்தி. 1/16, 1/4, 1,.................................காரணம் தருக.

18. $2\lg 5 + \lg 4$ இன் பெறுமானம் காண்க.

19. $y^2 - 3y + \square$ நிறைவர்க்கமாக்கச் சேர்க்க வேண்டிய எண் யாது? நிறைவர்க்கமாகத் தருக.

20. 8 வீதம் பங்குலாபம் கொடுக்கும் கம்பனி ஒன்று ரூபா 10 பங்குகளை ரூபா 12 வீதம் கொள்வனவு செய்ய 30,000/= ஐ ஒருவர் முதலீடு செய்தார்.
   1) பங்குகளின் எண்ணிக்கை யாது?
   2) பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?

21. -3, 2 ஐ மூலங்களாகவுடைய இருபடிச் சமன்பாடு ஒன்றைத் தருக.




22. $T_n = 5n - 3$ எனின் முதல் உறுப்புக்களை எழுதுக. விருத்தியின் $S_7$ ஐக் காண்க.

23. $1/V - 1/U = 1/T$ இல் U ஐ எழுவாயாக்குக.


24. காரணி அறிவுகொண்டு பெறுமானம் காண்க. $\sqrt{85 \times 77 + 16}$

25. $\lg 3 = 0.4771$ $\lg 2 = 0.3010$ எனின் $\lg 6$ ஐக் காண்க.

26. 


1) AB யின் படித்திறனைக் காண்க.
2) AB யின் சமன்பாட்டைக் காண்க.

உருவில் AB விட்டம்

27. 

1) $A\hat{O}C$ இன் பெறுமானம். (காரணம் தருக)
2) $B\hat{O}C$ இன் பெறுமானம். (காரணம் தருக)


28. x,y என்பன 7 சென்ரிமீற்றர் இடைத்தூரத்திலுள்ள இரு புள்ளிகள். y இலிருந்து சமதூரத்திலும், x இலிருந்து 4 சென்ரி மீற்றர் தூரத்திலும் உள்ள புள்ளிகளை ஒழுக்கு பற்றிய அறிவின் மூலம் அமைக்க.

29. 

நிழற்றியதன் சுற்றளவு யாது?

30. $x - 2y = 3$ என்னும் சமன்பாடுகளைத் தீர்க்காமல் $(x-y)$ இன் பெறுமானம் காண்க.
$3y - 2x = 5$

31. குறித்த பாடசாலை ஒன்றில் 11 ஆம் தர மாணவர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் சிரமதானத்தை நடத்தினர். சனிக்கிழமை சிரமதானத்தில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 102 பேர். ஞாயிற்றுக்கிழமை சிரமதானத்தில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 100 பேர் ஆகும். இரு நாட்களிலும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 8 ஆகும்.



# சொன்னது நீதானா?

ஹிந்திப் படமொன்றில் ஒரு பாடல்காட்சியை படமாக்க ஆறு கோடி செலவிடப்பட்டதாக ஒரு நாளிதழ் செய்தியைப் படித்தேன். தமிழ் சினிமாவிலும் ஒரு பாடலைப் படமாக்க ஐம்பது, அறுபது லட்சம் சாதாரணமாகச் செலவிடப்படுகிறது. அரங்க அமைப்புகள், கவர்ச்சிகரமான உடைகள், சேர்ந்தாடும் இளம்பெண்கள் என்று கவர்ச்சியைப் பிரதானப்படுத்தி உருவாக்கப்படும் அந்தப் பாடல்கள் படம் வெளியான ஒரு மாத காலத்திற்குள் பார்வையாளன் மனதில் இருந்து முற்றிலும் மறைந்து போய்விடுகிறது.

ஆனால் எந்தப் பரபரப்பும், கவர்ச்சியும், மின்னல்வெட்டுகளும் இல்லாமல் உருவாக்கப்பட்ட சில பாடல்கள் சினிமா ரசிகனின் மனதில் என்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. அப்பாடலை ரேடியோவில் கேட்கும்போது கூட பார்வையாளன் மனதில் படத்தின் காட்சிகள் தானே நிழலாடத் தொடங்குகின்றன. அப்படியான பாடல்களில் ஒன்று தான் சொன்னது நீதானா.

ஸ்ரீதரின் இயக்கத்தில் வெளியான நெஞ்சில் ஓர் ஆலயம் திரைப் படத்தில் இடம் பெற்றுள்ள இப்பாடலுக்கு இசையமைத்தவர் விஸ்வநாதன் ராமமூர்த்தி. பாடலை எழுதியவர் கண்ணதாசன். பாடியிருப்பவர் பி.சுசிலா. இந்தக் கூட்டணியில் உருவான பல பாடல்கள் வெற்றிகரமானவை.

பாடல்களைப் படமாக்குவதில் ஸ்ரீதரின் பாணி தனித்துவமானது. அவர் எடுத்த ஒரு பாடல்காட்சி கூட சோடைபோனதேயில்லை. மேற்கத்திய இசை மற்றும் நடனங்களில் ஆர்வம் கொண்டிருந்த ஸ்ரீதர் அதை தமிழ் சினிமாவிற்கு ஏற்ப உருமாற்றித் தந்திருக்கிறார். துரித இசையும் நடன மும் அவரது விருப்பங்கள். விஸ்வ நாதன் வேலை வேண்டும் என்ற காதலிக்க நேரமில்லை படத்தின் பாடலைப் பாருங்கள். அதில் மேற்கத்திய நடனமும் இசையும் அழகாக ஒன்று கலந்திருக்கின்றன.

துரித நடனத்தை விருப்பமாக கொண்ட ஸ்ரீதர் தான் சொன்னது நீதானா போன்ற அமைதியான பாடலை, எந்த நடன அசைவுமின்றி, நாலுக்கு எட்டு அளவுள்ள மருத்துவ மனையின் அறைக்குள்ளாகவே எடுத்திருக்கிறார். ஒரு பாடல்காட்சி முழுவதும் பாடலின் கதாநாயகனும் நாயகியும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது இதுவே முதன்முறை. வின்சென்டின் கமெரா தான் சுழல்கிறது, நெருங்கிச் செல்கிறது, விலகி நின்று துக்கத்தையும் விம்மலையும் அடையாளம் காட்டுகிறது.

இப்பாடலின் உண்மையான நாயகன கமெராவே. அது தான் பாடலின் ஆதார உணர்ச்சியை வெளிப்படுத்தும் கருவியாக உள்ளது. பாடலின் வரிகளுக்கு ஏற்ப கமெராவின் கோணங்கள் மாறுபடுகின்றன. கமெரா நகர்வதற்குக் கூட போதுமான இடமில்லாத அவ்வளவு சிறிய அறையில் எத்தனை ஷொட்கள் எடுத்திருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. வின்செண்ட் மாஸ்டரது சாதனையது.

கமெராவின் நகர்வுகளால் மட்டுமே பாடலின் ஜீவனைக் கொண்டு வந்துவிட முடியும் என்பதற்கு இப்பாடலே ஒரு முன்னுதாரணம். எத்தனை மாறுபட்ட கோணங்கள். கமெரா உயர்ந்து மேல்நின்று பார்க்கிறது, கட்டிலுக்கு அடியில் பயணிக்கிறது. குறுக்கு கம்பிகளின் வழியே பாடும் தேவிகாவை நோக்குகிறது, திறந்து கிடந்த ஜன்னலுக்கு வெளியே நின்று பார்க்கிறது, கண்ணாடியில் தோன்றும் பிம்பத்தைக் காட்டி கடந்து போகிறது, துயரமிக்க தேவிகாவின் முகத்திற்கு மிக அண்மைக்கு போகிறது, கட்டிலின் மீது அமர்ந்துள்ள முத்துராமனின் நோயுற்ற நிலையைச் சொல்வது போல மெதுவாக அவரை நோக்கித் தளர்வாக நகர்கிறது. படத்தொகுப்பும் கமெரா கோணங்களுமே பாடலைக் கச்சிதமாக்கியிருக்கின்றன.

ஏ.வின்செண்ட் தமிழ்சினிமாவின் சாதனை ஒளிப்பதிவாளர். அவரும் ஸ்ரீதரும் இணைந்து பணியாற்றிய படங்கள் சிறப்பானவை. வின்செண்ட் துலாபாரம் என்ற திரைப்படத்தை இயக்கினார். அப்படம் தேசிய விருது பெற்றது. மலையாள சினிமாவில் வின்செண்ட் புகழ்பெற்ற இயக்குனராகவும ஒளிப்பதிவாளராகவும் இருநதவர். இப்பாடல் அவரது ஒளிப்பதிவின் ஒப்பில்லாத சாதனை.



பாடல் காட்சி என்பது கதைக்குள் பொருந்தி வரவேண்டும். பாடல் வரிகள் கதாபாத்திரத்தின் மனநிலையை வெளிப்படுத்த வேண்டும். அந்த மன நிலையை அடையாளம் காட்டும்படியான இசையமைப்பும் பாடும் குரலும் வேண்டும். அதுதான் பாடலை உருவாக்குவதில் முக்கியம். பத்து கோடி செலவழித்து ஒரு பாடலை எடுத்தாலும் இது போன்ற எளிமையும் உணர்ச்சிகரமும் இல்லாத காரணத்தால் அது தூர எறியப்பட்டுவிடும் என்பதே உண்மை.

இன்றைய சினிமா இயக்குனர்கள் பலரும் மறந்துபோன இந்த நிஜத்தை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது என்பதாலே இப்பாடல் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

- எஸ். ராமகிருஷ்ணன்


# இருதரப்பு இனவாத ஐக்கியம்!

**பொ**துவாகவே ஈழத் தமிழர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது சற்று ஆச்சரியத்தால் நமது விழிகள் அகலத் திறப்பதுண்டு. இது நமது தமிழ் மத்தியதரவர்க்கத்தில் நிலவிவரும் மேற்கத்தைய மோகத்தின் விளைவாகவும் இருக்கலாம்.

நமது ஆச்சரியத்திற்கு பால்வார்ப்பது போன்று, இலங்கையின் இலட்சிய இனவாதிகளில் ஒருவரான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர, த.தே.கூட்டமைப்பு அமெரிக்காவுடன் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவது தேசத் துரோக செயலாகும், எமது நாட்டின் பரம எதிரிகளுடன் உள்நாட்டு விடயங்கள் தொடர்பில் பேசுவதானது எங்களது நாட்டுக்கெதிரான சூழ்ச்சிகரமான திட்டமாகும் என்றுவேறு குறிப்பிட்டிருக்கின்றார். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு கொஞ்சக் காலத்தை ஓட்டலாம் போல் தெரிகிறது.

இதே அமரதாச புலிகள் வலுவாக இருந்த காலத்தில் பிரபாகரன்தான் எம்மைக் காத்துநிற்கும் கடவுள், பிரபாகரன் மட்டும் இல்லாதிருந்தால் நாம் எப்போதோ சர்வதேச சதிக்குப் பலியாகியிருப்போம் என்று குறிப்பிட்டிருந்தார் என்பது வேறு கதை. ஒரு வகையில் குணதாச அமரசேகர சொல்லுவது போன்று, பிரபாகரன் தமிழர் அரசியல் சர்வதேச நிகழ்சிநிரலுக்குள் செல்வதை தடுத்துநிறுத்தியிருந்தார் என்பது உண்மைதான். அந்தவகையில் பிரபாகரனின் இறுக்கமான நிலைப்பாடு தங்களுக்கே அதிக நன்மையைச் செய்தது என்பது அமரதாசவின் கணிப்பு. பிரபாகரன் தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒன்றாகப் பார்த்த விடயத்தை, ஒரு சிங்களவாதச் செயற்பாட்டாளரோ தங்களுக்குச் சாதகமானதாகப் பார்த்திருக்கிறார்.

- யதீந்திரா கட்டுரையிலிருந்து...



**வி**யட்னாமில் இருந்த கடைசி ஜாவா இன காண்டாமிருகமும் கொல்லபட்டு விட்டதாக சுற்றுச் சூழல் ஆர்வலர் கள் தெரிவித்துள்ளனர். இந்த தகவலை உலக வன ஜீவராசிகள் நிதியம் மற்றும் சர்வதேச காண்டா மிருக அமைப்பு ஆகியன உறுதி செய்துள்ளன. வியட்நாமின் கேட்டினே தேசிய பூங்காவில் கடந்த ஆண்டு

# கடைசி காண்டாமிருகமும் கொல்லப்பட்டது!

ஏப்ரல் மாதத்தில் ஒரே ஒரு ஜாவா இன காண்டாமிருகமே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அந்த மிருகமும் அதன் கொம்புக்காக கொல்லப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் ஆர் வலர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி காண்டாமிருகத்தின் கால்பகுதியில் சுடப்பட்டு கொம்பு அகற்றப்பட்ட நிலையில் அதன் உடல் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வியட்நாமில் இருந்த ஜாவா இன காண்டாமிருகங்கள் முற்றாக அழிந்துவிட்டதாக உலக வனஜீவராசிகள் நிதியம் அறிவித்துள்ளது. உலகில் அருகிவரும் ஜாவா இன காண்டாமிருகங்கள் அதன் கொம்புக்காக வேட்டையாடப்பட்டு வருகின்றன. உலகில் 50 ஜாவா இன காண்ட மிருகங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

# நிறத்தைத் தந்தவர் யார்?



இலைகள் ஏன் பச்சைநிறத்தில் இருக்கின்றன என்று யாராவது கேட்டால், அதிலுள்ள பச்சையத்தால் என்று உடனே பதில் சொல்லிவிடலாம். கீரை எப்படி பச்சையாக இருக்கிறது என்றால் அதறகும் இதே பதிலைச் சொல்லிவிடலாம்.

நம் கண்களில் அன்றாடம் தென்படும் தோடம்பழத்தின் செம்மஞ்சள் நிறத்திற்கோ, கத்தரிக்காயின் ஊதா நிறத்திற்கோ காரணி யார்? நம் அருகிலேயே இருக்கும் சில நுணுக் கமானவற்றைக் கவனிக்க மறந்துவிடுகிறோம் அல்லது தவறிவிடுகிறோம். இயற்கை பல புதிர்களை எளியமுறையில் நாளும் நமக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது.

தோடம்பழம், கத்தரிக்காய் மட்டுமல்ல, திராட்சை போன்றவற்றிற்கும் இன்னும் இவை போன்ற பிறவற்றின் நிறங்களுக்கும் காரணம் அந்தோசயனின் என்ற நிறமிதான்.

நிறமி என்பது ஒரு வண்ணக் கூட்டுப் பொருள். இதில் இரண்டு வகைகள் உள்ளன.

ஒன்று இயற்கை நிறமிகள் அல்லது உயிரிய நிறமிகள். பச்சையம், பசுங்கணிகம், நிறக்கணிகம் போன்றவை இப்பிரிவில் அடங்கும். இவை ஒளிச்சேர்க்கையுடன் தொடர்பு உடையவை.

இரண்டாவது வகை இரசாயன நிறமிகள் ஆகும். குரோமியம் ஒக்ஸைட், ஃபெரஸ் ஒக்ஸைட் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை.


அந்தோசயனின் முதல் வகையைச் சார்ந்தது. தண்ணீரில் கரையக்கூடியது. தான் இருக்கும் பொருளின் அமிலத்தன்மையைப் பொறுத்து சிவப்பு, நீலம், ஊதா போன்ற ஏதேனும் ஒரு நிறத்தில் காணப்படும்.

பொருள் மீது படும் ஒளியின் செறிவு, ஒளியின் அலைநீளம், சுற்றுப்புற வெப்பநிலை, நீர், மாப்பொருள் அளவுகள், நைதரசன், பொஸ்பரஸ், போரன் ஆகியவற்றின் அடர்வு போன்ற பல காரணிகள் அந்தோசயனின் உற்பத்திக்கு காரணமாகின்றன.

காய்கனிகள் மட்டுமல்லாமல், மரங்கள், செடிகள் போன்றவற்றின் இலைகள், தண்டுகள், வேர்கள், பூக்கள், என்று பல்வேறு பகுதிகளிலும் அந்தோசயனின் காணப்படுகிறது.

# பிரதமர் மீது பழி சுமத்துவதற்கு காங்கிரஸ் கட்சியினர் முயற்சி

## சுப்பிரமணிய சுவாமி குற்றச்சாட்டு



(புதுடில்லி)

2ஜி ஊழலுக்கான முழுப் பொறுப்பையும் பிரதமரின் மீது சுமத்த காங்கிரஸ கடசி முயற்சி செய்வதாக ஜனதா கட்சித் தலைவர சுப்ரமணிய சுவாமி கூறியுள்ளார்.

செய்தியாளரிடம் அவர் மேலும் கூறுகையில் மன்மோகன் சிங்கை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி விட்டு, பிரதமர் பதவிக்கு ராகுலைக் கொண்டு வரும் தீவிர முயற்சியில் காங்கிரஸ கடசி யினர் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும், மன்மோகன் சிங்கை 2ஜி ஊழலுக்குப் பொறுப்பாளி யாக்க காங்கிரஸ கட்சியினர் முயற்சிக்கின்றனர். ஆனால் இதன் மொத்தப் பொறுப்பின் பின்னணியும் ஐக்கிய முற் போக்குக் கூட்டணித் தலைவர் சோனியாவிடம் உள்ளது. பிரதமரை இந்த ஊழலுக்குள் இழுத்து விடும் காங்கிரஸ்காரர் களுக்கு, பிரதமர் கிரிமினல் சட்டத்தை மீறியதாக எவரும் சொல்லமுடியாது என்று நான் கூறிக்கொள்கிறேன்.

மேலும், நான் அனைத்து கோப்புகளையும் பார்த்துவிட் டேன். அனைத்து தீர்மானங் களையும் ஆராய்ந்துவிட்டேன். எந்த இடத்திலும் மன்மோகன் சிங் நாட்டுக்கு இழப்பு ஏற் படுத்தும் விதமாக எந்த வழிகளி லும் செயல்படவில்லை என்று கூறுவேன். பிரதமர் தன்னுடைய முழு அதிகாரத்தையும் பயன் படுத்தி ராசா 2ஜி அலை வரிசை ஒதுக்கீட்டின் போதான ஊழலில் ஈடுபடுவதைத் தடுத்திருக்க வேண்டும். இந்த ஒரே ஒரு வழியை பிரதமர் செய்யாமல் விட்டுவிட்டார் என்றார்.

இந்தியச் செய்திகள்

# சுழற்சி முறையில் முதல்வர் பதவி காஷ்மீர் மாநில காங்கிரஸ் கோரிக்கை

(சிறிநகர்)

காஷ்மீரில் சுழற்சி முறையில் முதல்வர் பதவி வழங்கப்பட வேண்டும் என, காங்கிரஸ் கட்சி யினர் வற்புறுத்தி வருகின்றனர். காஷ்மீரில் கடந்த 2008ல் நடந்த சட்டசபைத் தேர்தலில் எந்த கட் சிக்கும் பெரும்பான்மை கிடைக் காததால் தேசிய மாநாட்டு கட்சி யும்,காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து ஆட்சி நடத்தி வருகின் றன. வரும் டிசம்பர் மாதத்துடன் முதல்வர் ஓமர் அப்துல்லா மூன் றாண்டு கால ஆட்சியை நிறைவு செய்கிறார். எனவே, அடுத்த முதல்வர் பதவி காங்கிரசுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என, முன்னாள் கல்வி அமைச்சர் முஸ்டாக் லோனின் மகன் சுகைப் லோன் கோரியுள்ளார். ஆனால், இந்த நடைமுறையை அமுல் படுத்த முடியாது என, முதல்வர் ஓமர் கடந்த ஆண்டு தெரிவித் திருந்தார்.

இதுகுறித்து சுகைப் லோன் குறிப்பிடுகையில், காங்கிரஸ் கட்சி, முதல்வர் பதவியை ஏற் பதற்கு இது தக்க தருணமாகும். இந்தத் தருணத்தை கைவிட்டால், தேவையில்லாமல் எதிர் விளைவு கள் ஏற்படும். இந்த மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி சளைத்த கட்சி யல்ல. அடுத்த முதல்வர் பதவிக்கு சைபுதின் சாசை தேர்வு செய்ய வேண்டும். இது குறித்து ராகு லிடம் தெரிவித்துள்ளோம். இந்த விஷயத்தை சோனியாவிடம் கூறுவதாக அவர் தெரிவித்துள் ளார் என்றார்.

# தமிழக முதல்வருக்கு பாராட்டுக்கள்

(சென்னை)

தமிழக முதல்வர் கேட்டுக்கொண்டதால் மத்திய அரசு இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கியுள்ளதற்கு இலங்கையில் அமைச்சர் செந்தில்தொண்டைமான் நன்றி தெரிவித் துள்ளார்.

இலங்கையில் மின்சக்தி, எரிபொருள், இளைஞர் நலத்துறை அமைச்சராக செந்தில்தொண்டைமான். செய்தியாளர்களிடம் கூறுகையில், இலங்கையில் தற்போது சகஜநிலை திரும்பி உள்ளது. இலங்கை தமிழர்களின் மறுவாழ்விற்காக முதல்வர் கேட்டுக் கொண்டதன்பேரில் மத்திய அரசு கூடுதல் நிதி வழங்கியுள்ளது. இதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

இலங்கைக்கு தினமும்15 விமானங்கள் வந்து செல்கின்றன. வெளிநாடுகளில் இருந்து வருபவர்களில் 60 சதவீதம் பேர் தொழில்கள் ஆரம்பிக்கும் முயற்சியாக வருகின்றனர். தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் குறித்த கேள்விக்கு வேறு துறை அமைச்சரான தாம் கருத்துக் கூறமுடியாது என்றார்.

# சீனாவின்ஊடுருவலை தடுப்பதற்காக அந்தமானில் இந்திய இராணுவம் குவிப்பு

(சென்னை)

இந்தியப்பெருங்கடல் மற்றும் வங்கக்கடலில் சீனாவின் ஊடுருவலை தடுக்க இந்தியா, அந்தமான் தீவுகளில் தனது பாதுகாப்பை அதிகரிக்க ஆரம் பித்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் இராணுவ முக்கி யத்துவம் வாய்ந்தது அந்தமான் நிக்கோபர் தீவுகள். இந்தியாவிலிருந்து மிகத் தொலைவில் இருக்கும் அந்தமான் தீவுகள், தென்கிழக்காசியாவுக்கான நுழைவு வாயிலாகவும் இருக்கிறது. வரும் இந்தியப் பெருங்கடலைத் தாண்டி இந்தியாவுக்கு எவ்வித ஆபத்தும், அந்தமானை கடந்து தான் இந்தியாவை தொடமுடியும் என்பதால், இப்பகுதி மீது சீனாவுக்கு ஆர்வம் அதிகம். கடந்த சில நாட்களுக்கு முன் சீனக்கடற்படை கப்பல் ஒன்று இங்கு உளவு பார்த்த சம்பவம் மத்திய அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதையடுத்து தனது பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியில் தற்போது இந்தியா இறங்கியுள்ளது. இதையடுத்து அங்கு 6 ஆயிரம் பாதுகாப்பு படை யினர் களமிறக்கப்படவுள்ளனர். இது தற்போது அங்கிருக்கும் வீரரர்களை விட 3 மடங்கு அதிகம். மேலும் 12 போர் விமானங்களும் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதுகுறித்து இந்திய இராணுவ பிரிகேடியர்



பல்விந்தர் சிங் கூறுகையில், அந்தமான் தீவுக்கூட்டத்தில் 572 தீவுகள் உள்ளன. இவற்றில் பாதுகாப்பு பணிகளுக்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரித்தார். இவர்கள் அப்பகுதி மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள உதவுவர் என்றும் தெரிவித்தார். இனி வரும் காலங்களில் சீனாவின் ஆதிக்கம் இப்பகுதியில் பரவாமல் இருக்க மேலும் பல தந்திரங்களை இந்தியா மேற்கொள்ளும் என்றார்.

# தமிழகத்தில் கடும் மழை காரணமாக நீரில் மிதக்கும் கரையோர மாவட்டங்கள்



(சென்னை)

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்கிறது. சென்னை உட்பட பல மாவட்டங்கள் நீரில் மிதக்கின்றன. கடலோர மாவட் டங்களில் கனமழை 2நாள் நீடிக் கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் மன் னார் வளைகுடா பகுதியில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது மெல்ல ஆந்திரக் கடலோரப் பகுதி வரை பரவத்தொடங்கியது. தமிழகம்,புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் நேற்று முன் தினம் இரவு முதல் நல்ல மழை பெய்து வருகிறது. அதில் தமிழகத்தில் அதிகபட்சமாக முத்துப்பேட்டையில் 90 மிமீ மழை பெய்துள்ளது. சென்னை யில் நேற்று காலை 8 மணி முதல் மதியம் 12 வரை 80 மிமீ மழை பெய்தது.

சென்னையில் அனைத்து சாலைகளிலும் மழை நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# இந்திய பணக்காரப் பெண்மணி

(சென்னை)




இந்திய பணக்காரர்கள் பட்டி யலில் 5ஆம் இடத்தில் இடம் பெற்றுள்ள சாவித்ரி ஜிண்டால், இந்தியாவின் பணக்காரப் பெண் மணியாக தேர்வு செய்யப்பட் டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி பப்ளிஷிங் மற்றும் மீடியா நிறு வனமான போர்ப்ஸ் நிறுவனம் சர்வதேச அளவில் பணக்காரர் கள் பட்டியல் உள்ளிட்ட பட்டி யல்களை அவ்வப்போது வெளி யிட்டு வருகிறது. அதன்படி தற் போது இந்திய பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் 5ஆம் இடம் பெற்றுள்ள சாவித்ரி ஜிண்டால் இந்தியாவின் பணக்காரப் பெண் மணியாக தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார்.

சர்வதேச அளவில் நிலவி வரும் அசாதாரண பொருளா தார ஸ்திரத்தன்மை, ரூபாயின் மதிப்பில் ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட காரணங்களால் இந்திய பணக் காரர்களின் சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 20சதவீதம் சரி வடைந்துள்ளதாக போர்ப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்திய பணக்காரர்கள் பட்டி யலில் தொடர்ந்து முகேஷ் அம் பானி முதலிடத்திலேயே இருக் கிறார். இவரது சொத்து மதிப்பில் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழந்திருந்த போதிலும், அவர் 22.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

# அன்னா ஹசாரேயின் மௌனவிரதம் தொடர்கிறது

(மும்பை)



அமைதியை வலியுறுத்தி மேற்கொண்டுள்ள மௌன விரதத்தை தொடர்வேன் என்று காந்தியவாதி அன்னா ஹசாரே தெரிவித் துள்ளார். வலையமைப் பிலிருந்து இது குறித்து தெரிவித்துள்ளதாவது, மௌன விரதத்திற்கு எனது உடல் ஒத்துழைக்க வில்லை என்பது உண்மைதான். எனது காலில் சிறிய சிறிய கொப்புளங்கள் மற்றும் முழங்காலில் தாங்கமுடியாத வலி இருந்தது. ஆனால் மௌன விரதத்தின் மூலம் இதனைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை தற்போது எனக்கு ஏற்பட்டுள்ளது. என்னி டம் உள்ள பேச்சாற்றல் தொடரபே,ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் என்னை தீவிரமாக ஈடுபட வைத்தது. இந்த மௌன விரதத்தின் மூலம் தற்போது தான் பலவீனமானதாக உணர்கிறேன். ஆனால், நான் எடுத்த முடி விலிருந்து பின்வாங்கப் போவதில்லை. மௌன விரதத்தை தொடர்ந்து மேற்கொள்ள உள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# துருக்கியில் நிவாரணப்பணி துரிதம் மூன்று வார சிசு உயிருடன் மீட்பு

## 400 பேர் மரணம் ; 1300 பேர் காயம்



(அங்காரா)

துருக்கியில் கடந்த வாரம் 7.2 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இதில துருக்கியின் கிழக்குப்பகுதியில் கடும் சேதம் அடைந்தது. வேன் நகரில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானது. இடிபாடுகளை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடக்கிறது.

இதுவரை 400 வரையானோர் பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இதில் பலியாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுவரை 366 உடல்கள் மீட்கப்பட்டன. 1,301 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளளனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் இடிபாடுகளில் சிக்கித் தவிக்கறார்கள். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகிறது. துருக்கியின் எர்சிஸ் மாவட்டத்தில் பிறந்து 3 வாரமே ஆன பச்சிளம் சிசு நில நடுக்கம் ஏற்பட்ட 2 நாட்கள் கழித்து இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டது.

பெற்றோரை இழந்த அந்தக் குழந்தையை நிவாரண முகாமில் வைத்து டாக்டர்கள் கவனிதது வருகிறார்கள். ஈரான் எல்லையில் உள்ள 75 ஆயிரம் மக்கள் வசித்த நகரல் நில நடுக்கத்தால் பல கட்டடங்கள் தரை மட்டமாகின.

அடுக்குமாடி குடியிருப்புகளும் இடிந்தது. இதில் பலர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுவதால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும். மீட்புப் பணிக்கு வெளிநாடுகளின உதவி தேவையில்லை என்று துருக்கி அரசு மறுத்துவிட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதில் 26 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான மீட்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் 3 ஆயிரம் வர்ர்களும், 355 வாகனங்களும் ஈடுபட்டுள்ளன. 100 அம்புலன்சுகள் அவசர சிகிச்சை உதவிககு தயார் நிலையில் உள்ளது.

# கடாபியின் மகன் சரணடைய விருப்பம்



(திரிபோலி)

லிபிய முன்னாள் தலைவர் கேணல் முவம்மர் கடாபியின் புதல்வரான சைய்ப் அல் இஸ்லாம் சர்வதேச நீதிமன்றத்தில் சரணடைய விரும்புவதாக தேசிய மாற்றத்திற்கான பேரவை அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட சைய்ப் அல் இஸ்லாம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் சரணடைவதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளதாக லிபிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். புலனாய்வுப் பிரிவின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி அப்துல்லா அல் சனூசியும், நெதர்லாந்தினைத் தளமாகக் கொண்ட குற்றவியல் நீதிமன்றத்தில் சரணடைய விரும்புவதாக பேரவையின் அதிகாரியான அப்தில் மஜிட் மிலகாட்டா கூறியுள்ளார்.

# சவூதி அரேபியாவின் புதிய இளவரசர்



(றியாத்)

சவூதி மன்னரின் அடுத்த வாரிசான புதிய இளவரசராக அந்நாட்டு உள்துறை அமைச்சர் நியமிக்கப்படவுள்ளார். சவூதி மன்னராக அப்துல்லா உள்ளார். இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக சவூதி அரேபியா நாட்டின் இளவரசராக இருந்த சுல்தான் கடந்த வாரம் காலமானார்.

இதைத் தொடர்ந்து புதிய இளவரசரைத் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. தற்போது உள்துறை அமைச்சராகவுள்ள நைபீப் என்பவர் புதிய இளவரசராகத் தேர்வு செய்யப்படலாம் எனவும், அதற்கான முறையான ஒப்புதல் அரண்மணை நிர்வாகம் இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்துறை அமைச்சரான நைபீப்(வயது-78) என்பவர் கடந்த 1933ஆம் ஆண்டு பிறந்தார். கடந்த 1975ஆம் ஆண்டு உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகராகவும் உள்ளார்.

# சமூக வலைத்தளங்களுக்கு சீனாவில் கட்டுப்பாடு

(பீஜிங்)

சமூக வலைத்தளங்கள், சமூக ஊடகங்கள், குறுந்தகவல் அனுப்பும் தளங்கள் ஆகியவற்றைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் சீனா நடவடிக்கை எடுக்க தீவிரம் காட்டுகிறது.

ஆளும் அரசுக்கு ஆதரவாகவுள்ள செய்திகள், அறிக்கைகள், கருத்துகள் குறித்த இணையத்தள நிர்வாகத்தை பலப்படுத்துவது குறித்து தலைவர்கள் மட்டத்தில் பேசப்பட்டதாக பீப்பிள்ஸ் டெய்லி செய்தி வெளியிட்டுள்ளது. கம்யுனிஸ்ட் அரசின் மத்திய குழுவின் வருடாந்தக் கூட்டம் இந்த மாதம் நடந்த போது, கொள்கை உருவாக்கல் குறித்த செயல்திட்டமும் இடம் பெற்றது. இதில் மக்களிடம் பரவலாக செல்வாக்குப் பெற்றுவரும் மைக்ரோ பிரிவுகள் குறிதத கட்டுப்பாடை அரசு வைத்திருக்கவும் கண்காணிக்கவும் வேண்டிய தேவைகள் குறித்து அலசப்பட்டதாம்.

# தலிபான் பயங்கரவாதிகளுக்கு பயிற்சியளிக்கும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பல முறை மறுத்து வந்த போதிலும் ஆப்கானிஸ்தான் எல்லையில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு முகாம் அமைத்து பயிற்சியளித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பயிற்சியை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ நடத்தி வருகிறது. குண்டு தயாரிப்பது குறித்து பயிற்சியளிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து தலிபான் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில், பயற்சி முகாம் நடத்தி வருபவர்களில் ஐ.எஸ்.ஐ அமைப்பை சேர்ந்தவர்களும் உள்ளனர்.

அவர்கள் முதலில் குண்டு தயாரிப்பது பற்றி கற்றுத்தருகின்றனர். பின்னர் செயல்முறை பயிற்சியளிக்கின்றனர். இந்தப் பயற்சியின் போது ஐ.எஸ்.ஐ. அமைப்பின் அதிகாரிகள் பிரச்சன்னமாகி இருக்கின்றனர். தலிபான் அமைப்பு ஐ.எஸ்.ஐ உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது என கூறினார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

தஞ்சம் புகுதலின் சுமை நம் அடையாளங்களை இழத்தல் என்பதில் உண்மை இருக்கிறது– ஊரோடு ஒத்து வாழ் என்பதும் ரோமில் ரோமானியன் போல் இரு என்பதும் உலகெங்கும் ஒரு நியதியாக இருக்கிறது. எந்த நாட்டினராக இருந்தாலும், தொடரும் தலைமுறைகள் தாம் குடியேறிய மண்ணில் தங் களுக்கு தனித்துவம் தரும் அடையாளங்களை அவமான மாகக் கருதி அவற்றை இழந்து ஒரு பெருங்கூட்டத்தில் தங் களைக் கரைத்துக் கொள்ள முயற்சி செய்வது தான் உலக இயல்பாக இருக்கிறது.

**– நந்தின் அரங்கன்**

ஆக்கிரமிப்பாளர்களின் உலகப் பார்வையைத் தாங்கள் சுவீகரித்துக் கொண்டதன் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் ஆக் கிரமிப்பாளர்களைத் தங்களுக்குள்ளேயே அனுமதித்துவிடு கின்றனர். ஆக்கிரமிப்பாளர்களைப் போல நடப்பது, உடுப்பது, பேசுவது என்றாகி விடுகின்றனர். ஆக்கிரமிப்பாளர்களைப் போல எந்த அளவிற்கு ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் பாவனை செய் கின்றனரோ அந்த அளவிற்கு ஆக்கிரமிப்பாளர்களின் ஒடுக்கும் நிலை உறுதியாகின்றது. ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் தங்களைத் தாழ்ந்தவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும், கேவலமான வர்களாகவும், பேசுவதற்குச் சொல்லற்றவர்களாகவும் உணர்ந்து மௌனமாகின்றனர். இவற்றின் பொருள் தாங்கள் ஒடுக்கப்படுவது பற்றிய உணர்வை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதல்ல. தாங்கள் கொடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அவர்கள் உணர்ந்தே இருக்கின்றனர். ஆனால் ஒடுக்குபவர்கள் – ஒடுக்கப்படுபவர்கள் என்கிற நிலையைக் கடந்த ஒரு சமத்துவ மான சமூக உறவை அவர்களால் கற்பனை செய்ய முடியாது. ஒடுக்குமுறையிலிருந்து சகலருக்கும் விடுதலை என்றில்லா மல் ஒடுக்குபவர்களுடன் தங்களை அடையாளம் கண்டு அந்நிலைக்குத் தாங்களும் 'உயர' வேண்டும், ஒடுக்குபவர் களாகத் தாங்களும் மாறினால் போதும் என்பதே அவர்களது குறிக்கோளாகின்றது.

**– அ.மார்க்ஸ்**

ஒவ்வொரு செடியும் மற்ற செடிகளை எதிர்த்தே வளர்கிறது. காட்டில் ஓங்கும் ஆலமரம் பல்லாயிரம் செடிகளின் இடத்தை தான் எடுத்துக் கொள்கிறது. அதன் வெற்றி அப்பகுதி மீதான அதன் அதிகாரமேயாகும்.

**– ஜெயமோகன்**

பல நாகரிகங்கள் முற்றிலும் அழிக்கப்பட்ட தகவல்கள் 15ஆம் நூற்றாண்டிலிருந்து ஏராளமாகக் கிடைக்கின்றன. அமெரிக் கக் கண்டத்தின் ஆதிவாசிகளான சிவப்பிந்தியர்கள் லட்சக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர். மாயா, இன்கா நாகரி கங்கள் இருந்த இடம் தெரியாமல் பூண்டோடு அழிக்கப்பட்டன. ஆபிரிக்க இனங்கள், அவுஸ்ரேலியப் பழங்குடிகள் முற்றிலும் அழிக்கப்பட்டு, வெள்ளையர்கள் குடியேற்றம் தொடங்கியது. சரியான காரணம் காட்டாமல் ஒன்றை அழிப்பது குற்ற உணர் வைத் தூண்டும் என்பதால் நியாயங்கள் – காரணங்கள் கற்பிக்கப்பட்டே இனக்கொலைகள் நிகழ்ந்தன. காட்டுமிராண்டிகள், நரபலி கொள்பவர்கள், ஆடையில்லாமல் திரிபவர்கள், கடவுள் நம்பிக்கை அற்றவர்கள், விக்கிரக ஆராதனை செய்பவர்கள், ஆண்மை அல்லது வீரம் குன்றியவர்கள் என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்பட்டன. தங்களால் அழிக்கப்பட்டவர்கள் மனிதர்களே அல்ல. விலங்கு நிலையிலிருந்து அதிகம் முன்னேறாதவர்கள் என்றும் கூறப்பட்டதுண்டு. வால்மீகி ராமாயணத்தில், வாலியை வீழ்த்திய பின்பு ராமன் தன் செயலை நியாயப்படுத்தக் கூறும் காரணங்களில் முடிவானது வாலி ஒரு வானரம், குரங்கு ஆகவே (மனித) தர்மப்படி அவனை வதம் செய்தது தவறல்ல.

**– ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்**

முதலாவதாக, வரலாற்று உண்மைகள் ஒருபோதும் 'தூய்மை'யானவையாக நம்மிடம் வந்து சேர்வதில்லை. காரணம் அவை ஒரு தூய வடிவத்தில் இருப்பதில்லை. இருக்க முடியாது. அவை எப்போதுமே, அவற்றைப் பதிவு செய்பவனின் மனத்தின் மூலம் ஒளிச்சிதைவு (refract) செய்யப்படுகின்றன. இரண்டாவதாக, வரலாற்றாசிரியன் எவரைப் பற்றி எழுதுகிறானோ அவர்களது மனத்துடன் ஒரு வகைத் தொடர்பை உருவாக்கிக் கொள்ளாவிட்டால் வரலாற்றை எழுத முடியாது. மூன்றாவதாக, நிகழ்காலக் கண்களின் மூலமே நம்மால் கடந்த காலத்தைப் பார்க்க முடியும். அதைப் பற்றிய நமது புரிந்துணர்வைப் பெறமுடியும்.

**– ஈ.எச். கார்**

நினைத்தபோது கண்ணில் கண்ட பெண்களைச் சுவீகரித்துக் கொள்வது அங்கீகரிக்கப்பட்டதாக இருந்த நாளில் ஓர் அரசன் எந்த ராணியிடமும் நமது சரித்திர நாவல்களில் உள்ளபடி நடந்துகொண்டிருக்க முடியுமா?

**– அசோகமித்திரன்**

வரலாறுகள் எவையும் மனித உடல்களின்மீது பதியப்பட்ட வன்முறைகளைச் சொல்வதில்லை. வலியையும் துயரையும் விவரிப்பதற்கான மொழிச்சாதனங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வன்முறையின் கையொப்பமிடப்பட்ட உடல்களை எழுத இங்கு மொழியில்லை. தவிரவும் புறவயமாக நின்று எழுதுதலே சிறந்த ஆய்வு என்ற மதிப்பீடு கோலோச்சம் நிலையில் ஒரு ஆய்வினூடாக எப்படித் துயர்களையும் வலிகளையும் வெளிப்படுத்துவது? எல்லாவற்றிற்கும் மேலாக வன்முறையும், கலவரங்களும் வன்முறையின் கனமான உடல்களை மட்டுமன்றி அதன் சாட்சிகளையும் சேர்த்தே எப்போதும் அழித்துவிடுகின்றன. எனவே அரசு அதிகாரிகள் அனுப்புகிற அறிக்கைகளில் பொதிந்துள்ள வெறும் எண்களாகவே வலியும் துயரும் வரலாறுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

**– அ. மார்க்ஸ்**



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் வரலாற்றைத் திருத்தட்டும்!

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் 2011.10.21 ஆம் திகதி ஆற்றிய உரை.**

கௌரவ நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அவர்களே!....

இந்த நாட்டில் அழிவுகளை மட்டும் தந்துகொண்டிருந்த யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டமை சாதாரண குடிமக்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் நீடித்த மகிழ்ச்சிக்கு அதிக விலை கொடுத்துள்ளதால் அழிவுகளுக்கு பின்னராவது நிமிர்ந்தெழுவோம் என்ற நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் காத்திருக்கிறார்கள்.

ஆனாலும், அழிவு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டமை குறித்து துயரப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே. கடந்த காலங்களில் அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் துணைபோனவர்கள் அழிவுகளையும், அவலங்களையும் மட்டுமே எடுத்துக் காட்டி சுயலாப அரசியல் நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தொடர்ந்தும் தமது வழமையான அரசியலை நடத்த முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவேதான், இப்போது அரசாங்கத்தால் நாடு முழுவதும் முன்னெடுக்கப் பட்டு வரும் காணி உரித்துப்பதிவு நடவடிக்கையினை, தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட செயலாக

பொய்யுரைத்து, அதை வைத்து தமது சுயலாப அரசியலை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து தேசிய மட்டத்தில் நாடு தழுவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டமானது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி உரித்துப்பதிவு சட்டத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்பதை நான் இந்த சபையில் எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கைத் தீவெங்கும் தனியார் காணிகளுக்கான உறுதி, அரச காணிகளுக்கான அனும திப்பத்திரம் (பேமிற்) மற்றும் அளிப்புப் பத்திரம் (கிரான்ட்) ஆகியவற்றை மிகவும் நம்பகத் தன்மயுடையதும் அரச உத்தரவாதமுடையதுமான உரித்து ஆவணமாக மாற்றுவது,

மேலும் அதை வினைத்திறன் மிக்க, எளிமையான பத்திரமாக உருவாக்குவது. இதன் ஊடாக நடைமுறையில் இருந்து வரும் காணிப்பிணக்குகளைத் தீர்த்து வைப்பதன் மூலம், சம்பந்தப்பட்ட சாதாரண குடிமக்கள் தத்தமது காணிகளின் உரித்தை வலுப்படுத்துவது,

சிறந்த காணி முகாமைத்துவத்திற்காக கணினிமயப் படுத்தப்பட்ட காணித்தகவல் முறையொன்றை உருவாக்குவது

இவைகளே இப்போது நடந்து வரும் காணி உரித்துப் பதிவு நடவடிக்கையின் உண்மையான நோக்கங்களாகும்.

காணி உரித்துப்பதிவு நடைமுறை என்பது ஏற்கனவே தென்னிலங்கையில் கடந்த 2002 ஆம் வருடம் முன்னோடி நடவடிக்கையாக கம்பளை, பலாங்கொடை, தம்புத்தேகம, திவுலப்பிட்டிய, ஹோமாகம ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பித்து

பின்னர் தேசிய அளவில் 2007 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுக்கப்பட்டு

வருகிறது. இந்த வகையில் தென்பகுதியில் 72 பிரதேச செயலகப் பிரிவுகளில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் யுத்தம் நடந்து கொண்டிருந்த சூழ்நிலை காரணமாக இப்போதுதான் இந்தத் திட்டம் இப்பகுதிகளில் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இதற்கு மேலதிகமாக, வடக்குக் கிழக்கு பகுதிகளில் அரசியல் ரீதியிலான முறைகேடுகள் காரணமாகவும் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாகவும் அழிந்து போயுள்ள அரசகாணி தொடர்பிலான ஆவணங்களை மீள வழங்கும் நடவடிக்கை 2011-4 சுற்றுநிருபத்தின் பிரகாரம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாம் ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையிலும், தமிழ் மக்களின் வாழ்வாதார மற்றும் அரசியல் உரிமைகளுக்காக உழைத்து வருகின்றவர்கள் என்ற வகையிலும் இது குறித்து தமிழ் மக்களுக்கு உண்மை நிலை என்ன என்பதை தெரியப்படுத்த வேண்டியதும் எமது பொறுப்பாகும்.

நடைபெற்று வரும் காணி உரித்துப்பதிவு சட்டத்தினால் தமிழ் பேசும் மக்கள் எந்த விதமான பாதிப்புகளையும் அடையப்போவதில்லை என்பதையும் இதனால் எமது மக்களுக்கு நன்மையே ஏற்படும் என்பதையும் நாம் ஆராய்ந்து அறிந்துள்ளதால் நாம் இச்சட்டத்தை ஆதரித்திருந்தோம் என்பதையும், நான் இந்த சபையில் எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இந்தக் காணி உரித்துப்பதிவு நடவடிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் அச்சமூட்டப்பட்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பெயரில் இருக்கும் காணிகள் பறிமுதல்

செய்யப்பட இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரால் திட்டமிட்ட வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மூத்த தலைவர்கள் சிலர் கடந்த காலங்களில் தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தி தனியார் மற்றும் அரச காணிகளை பலாத்காரமாகவும் கபடத்தனமாகவும் அபகரித்த குட்டு அம்பலப்பட்டு விடும் என்று அஞ்சியும் தங்களது சுயலாப அரசியலுக்காகவும் இப்படியான பிரசாரங்களை

முன்னெடுத்து வருவதுடன் தமது சுயலாப எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே இந்த சபையின் ஊடாக நான் புலம்பெயர்ந்து வாழும் எம் தமிழ் பேசும் உறவுகளுக்கு இந்த விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நீங்கள் காணி உரித்துப் பதிவுக்காக இங்கு வரவேண். டிய அவசியம் இல்லை என்பதையும், நீங்கள் வாழும் நாடுகளில் இருந்து கொண்டே உங்களது உறவினர்கள், அல்லது நண்பர்கள் அல்லது கணினி மூலமாக உங்களது காணிகள் தொடர்பான தகவல்களை வழங்கி பதிவு செய்ய முடியும் என்பதையும் இதற்கு மேலதிகமாக எந்தவொரு ஆவணமும் தேலையில்லை என்பதையும் இதற்கு மேலதிகமாக எந்த முயற்சிகளையும் செய்யத் தேவையில்லை என்பதையும் நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இதேவேளை, கடந்த கால அழிவு யுத்தத்தின் போது இறந்தவர்களின் காணிகளோ அன்றி இயற்கை மரணம் எய்தவர்களின் காணிகளோ நடைமுறையில் இருந்து வரும் காணி உரிமைச் சட்டத்தின் பிரகாரம், இறந்தவர்களின் சந்ததியினருக்கே அந்தக் காணிகள் சொந்தமாகும் என்ற விடயத்தையும் நான் இந்த சபையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கௌரவ நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அவர்களே!...

நாடளாவிய ரீதியில் நடந்து வரும் காணி உரித்து பதிவு நடைமுறையானது தமிழ் மக்களுக்கு விரோதமான ஒரு செயல் அல்ல. இது தமிழ் மக்களுக்கு மேலும் பயனுள்ளதாக அமையும். இது தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கையாக இருந்திருந்தால் இந்த நடவடிக்கையை நான் ஏற்றுக்கொண்டிருக்கமாட்டேன். உரிய தரப்போடு, உரிய முறையோடு நான் எமது மக்களுக்காக நீதி கேட்டு வாதாடியிருப்பேன். இதை நான் உறுதியாக இந்த சபையில் எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

இச்சட்டமானது 1998 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட போது, இன்று இதை சுயலாப அரசியல் காரணங்களுக்காக எதிர்த்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சார்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரான சட்டமேதை அமரர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் கூட இச்சட்டத்தை சரிவரிப் புரிந்து கொண்டதன் காரணமாகவே இதை அவர் அன்று எதிர்த்திருக்கவில்லை. அத்துடன் இது ஒரு நல்ல விடயம் என்றும் இதனை எதிர்ப்பது எமக்கு பாதிப்பாக அமைந்து விடும் என்றும் அவர் என்னிடம் கூறியதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அரசாங்கம் சரியானதை செய்யும்போது அதை ஆதரிப்பதும், தவறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அதை சுட்டிக்காட்டி அதற்கு உரிய தீர்வு காணும் உண்மையான நோக்கத்தோடு செயற்படுவதுமே நாம் முன்னெடுத்து வருகின்ற இணக்க அரசியல் வழிறையாகும்.

உரிமைக்குக் குரல் கொடுப்பதும், உறவுக்கு கரம் கொடுப்பதுமே எமது இணக்க அரசியல் கோட்பாட்டின் அடிப்படை கொள்கையாகும்.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தி வருவது வெறுமனே ஒரு சுயலாப அரசியலுக்கான எதிர்ப்பு மட்டும்தான். அரசாங்கம் சரியானதை செய்தாலும் அதை எதிர்ப்பார்கள், தவறானதை செய்தாலும் அதை எதிர்ப்பார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவறானவற்றை எதிர்ப்பது கூட அந்த தவறுகளை திருத்தி, சரியான வழிமுறை நோக்கி அரசாங்கத்தை அழைத்து வருவதற்காக அல்ல. தவறுகள் தவறுகளாகவே இருக்க வேண்டும் என்றும், அந்தத் தவறுகள் தொடர வேண்டும் என்றும், இதை வைத்தே தமது நாடளுமன்ற நாற்காலிகளை தக்க வைத்துக்கொள்வதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் உண்மையான நோக்கமாகும்.

இல்லாத பிரச்சினைகளை தாமே உருவாக்கி அதை தமது தேர்தல் வெற்றிகளுக் காக பயன்படுத்துவதே இவர்கள் செய்து வரும் மக்கள் விரோத நடவடிக்கையாகும்.

காணி உரித்துப் பதிவு தொடர்பில் இவர்கள் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தாலும் இவர்களும் இவர்களது குடும்ப உறுப்பினர்களும் வேகமாக காணி உரித்துப் பதிவுகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதனையும் இவர்களுக்கு நெருக்கமானவர்களை காணி உரித்துப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தூண்டியும் வருகிறார்கள் என்பதனையும் நான் இந்த சபையில் அம்பலப்படுத்த விரும்புகிறேன்.

அத்துடன் காணி உரித்துப் பதிவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் (விநாயகமூர்த்தி) காணி தொடர்பான எதிர்ப்புப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தபோது அதற்கு எதிர்ப்புத்

தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான (சுமந்திரன்) அவர்களும், அவர்கள் சார்ந்த சக நாடாளுமன்ற உறுப்பினரும் பத்திரிகை உரிமையாளருமான சப்றா சரவணபவன் அவர்களும் வெளிநடப்புச் செய்தனர் என்பதனை இச்சபைக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல் இக்காணி உரித்துப் பதிவு தொடர்பில் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏதும் கிடையாது என மாகாண காணி ஆணையாளரை சந்தித்து தான் தகவல் அறிந்து கொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி பத்திரிகை உரிமையாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தனது பத்திரிகையில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார் என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்டுவதோடு அதை இந்தச் சபையில் சமர்ப்பிக்கவும் விரும்புகிறேன்.

இவர்கள் தங்களது சுயலாப அரசியல் காரணமாக மக்களை தவறாக வழிநடத்தி வருகிறார்கள் என்பதற்கு யாழ். முத்திரைச்சந்தியில் யாழ். மாநகரசபையால் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் சங்கிலியன் சிலை தொடர்பான விடயம் இதற்கு நல்லதொரு உதாரணம். கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் காலத்தில் சங்கிலியன் சிலையை உடைத்து புத்தர் சிலை நிறுவப்போவதாக சொன்னார்கள்.

இப்போது அதே இடத்தில் அந்த சங்கிலியன் சிலை புதுப்பொலிவோடு எழுந்து

நிமிர்ந்திருப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போலி அரசியலுக்கு சிறந்த சாட்சியமாகும்.

சங்கிலியன் சிலையை கடந்து செல்லும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தலை குனிந்தே செல்கிறார்கள் என மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

(மிகுதி நாளை)

# பொதுநலவாய போட்டிகளை விடவும் வட, கிழக்கின் தேவைகள் அதிகம்

## கூறுகிறது ஐ.தே.க.



(கொழும்பு)

பொதுநலவாய போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடத்துவதைப் பார்க்கிலும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய அதிமுக்கியமான பல தேவைகள் வடக்கு, கிழக்கில் பரந்தளவில் தேங்கிக் கிடப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கிரிக்கெட் கலாசாரமே அற்ற அம்பாந்தோட்டையில் சர்வதேச கிரிக்கெட் அரங்கை அமைத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுநலவாய போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடத்துவதைப் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பினைத் தெரிவிக்கவில்லை. பாரிய விளையாட்டுப் போட்டிகள் இங்கு நடத்தப்படுவது நன்மையளிக்கும் விடயமாகும்.

இருப்பினும் அவ்வாறானதொரு போட்டித் தொடரை நடத்துவதற்கான இயலுமை இருக்கின்றதா என்பதை பற்றியும் இங்கு சிந்திப்பது அவசியமாகும்.

மேலும் எமது நாட்டின் இன்றைய நிலைவரங்களின் பிரகாரம் அம்பாந்தோட்டையில் இவ்வாறு பாரிய போட்டித் தொடர் ஒன்றை நடத்துவதிலும் பார்க்க வடக்கு, கிழக்கில் நிறைவேற்ற வேண்டிய பாரிய பல தேவைகள் பரந்த நிலையில் தேங்கிக் கிடக்கின்றன. அதேபோல் வீடுகளை நிர்மாணிக்க வேண்டிய தேவைகளும் உள்ளன. இவற்றையும் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

### நல்லிணக்கத்தை....

ஆனால் இலங்கையில் இடம்பெற்ற போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த பின்னர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு அமைய அரசாங்கத்துடன் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் கலந்துரையாடலின் ஒரு பகுதியாகவே இச்சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித்த ஹொகன்னவும், பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஐ.நா. செயலருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள நிலையில், அவ்வறிக்கையை ஓராண்டு கழித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அமைச்சர் மகிந்த சமரசிங்க கோரியுள்ளார்.

இது தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸ் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் கேட்டபோது, 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அவர் பதிலளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக மேலதிக விளக்கங்களை அரசாங்கத்தின் சார்பில் எடுத்துக் கூறவே ஜனாதிபதி மகிந்த, அமைச்சர் மகிந்த சமரசிங்கவை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்திருந்தார். இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடனான சந்திப்பின் போது நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் கருத்துக்களை அமைச்சர் கூறிய போதிலும், பான் கீ மூன் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததாக தெரியவருகின்றது.

### நிதிச்சந்தை நெருக்கடியைப்...

பொதுநலவாய வணிக அரங்கத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன், முன்னேறிய நாடுகளின் தலைவர்கள் அவர்களது நிதிச் சந்தைகள் நெருக்கடிக்கு உள்ளாகி வரும் பிரச்சினை தொடர்பாக காலம் பிந்திய நிலையிலும் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

முன்னேறிய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் அதிகரித்து வரும் நிதி நெருக்கடிகள் மற்றும் வேலையில்லாப் பிரச்சினை போன்ற அம்சங்கள் அந்நாடுகளில் அரசியல், பொருளாதார கிளர்ச்சிகளைத் தோற்றுவித்துள்ளது.

இந்நிலைமை தொடருமாயின் மிகவும் மோசமான அரசியல் பிரச்சினைகளுக்கு இட்டுச்சென்று உலக பொருளாதார உறுதிப்பாட்டை நிலைகுலையச் செய்யும்.

இவ்விகாரம் தொடர்பில் உலகத் தலைவர்கள் சரியான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். இல்லாதுவிடின் உலக பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து மீளமுடியாத வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும்.

அதேவேளை, பொதுநலவாய அரசியல் தலைவர்களின் அடுத்த மாநாடு நடைபெறவுள்ள இலங்கை கடந்த ஆறு வருடங்களாக நம்பிக்கையை பேணிவருவதில் வெற்றி கண்டுள்ளது. உறுதியான அரசியல் பின்னணியை வழங்கியதாலேயே இது சாத்தியமாகியது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் இடம்பெற்ற வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 22 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் 8 சதவீதமாக இருந்த வேலையின்மை 4.3 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 28 சதவீதமாக இருந்த பணவீக்கம் 6 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அரச...

முதல் கட்டமாக, சிங்கள மொழி மூலம் 100 பேரையும், தமிழ் மொழி மூலம் 60 பேரையும் இணைத்துக் கொள்ளவிருப்பதாக, அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரட்ன மேலும் தெரிவித்தார்.

### யாழ். பல்கலை...

உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் சிவில் சமூக பிரதிநிதிகள் குழு மாணவர் ஒன்றியத்திற்கு ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தது.

அதாவது மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பை இடைநிறுத்தி விரிவுரைகளுக்கு செல்லுமாறு கோரி இருந்ததற்கு அமைவாகவும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்கவும், எமது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர் பகிஷ்கரிப்பால் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும் இப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி செல்வதற்கு சிவில் சமூக பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்ததினாலும், எமது விரிவுரைப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளோம்.

எனவே எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து மாணவர்களை விரிவுரைகளிற்கு சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, எமது பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து மாணவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# மானிய உரத்தைப் பெறவும்

(வடமராட்சி)

புலோலி கமநல சேவைகள் நிலையத்தினரால் விவசாயிகளுக்கு 2 ஆம் கட்ட மானிய உரம் விநியோகிக்கப்படவிருக்கின்றது.

புலோலி தெற்கு பகுதிக்கு முதலாம் திகதியும், கெருடாவில் கிழக்கு பகுதிக்கு 2 ஆம் திகதியும், கெருடாவில் தெற்கு பகுதிக்கு 3 ஆம் திகதியும், கெருடாவில் வடக்கு பகுதிக்கு 4 ஆம் திகதியும், துன்னாலை வடக்கு பகுதிக்கு 3, 4 ஆம் திகதியும், வல்லிபுரம் பகுதிக்கு 8 ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளது.

குறிப்பிடப்பட்ட இடத்தில் அன்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை வழங்கப்படவுள்ளதால் விவசாயி கள் உரியகாலத்தில் மானிய உரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு புலோலி கமநல சேவைகள் பெரும்பாக அலுவலர் கு.கோகுலன் அறிவித்துள்ளார். (116)

### அரசியல்...

தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுக்க எவ்வித சந்தர்ப்பமும் இல்லை என அவுஸ்ரேலிய சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அவுஸ்ரேலிய சட்டத்தின் படி அப்படியான வழக்குகளை தாக்கல் செய்ய முடியாது என சட்டமா அதிபர் தெளிவாக ஏற்றுக்கொண்டுள்ளார். இதனால் வழக்கு ஆரம்பிக்கும் முன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

### பல்கலைக்கழக...

ராஜபக்ஷவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் 10 ஆவது மாதாந்த பொதுக்கூட்டம் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் ஆரம்பமாகியது.

முதலில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் மாநகர சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டிருக்கும் தனியார் தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக பொதுமக்களால் எதிர்நோக்கப்படும் அசௌகரியங்கள் குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கடந்த 16 ஆம் திகதி பழம் வீதியில் வைத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டமை, கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி பூநகரியில் வைத்து இ.கவிராஜன் என்ற யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டிருப்பது, யாழ்.பல்கலைக்கழகம் 11 ஆவது நாளாக பகிஷ்கரிப்பில் மூழ்கியுள்ளது தொடர்பாகவும் கவனயீர்ப்புப் பிரேரணை மற்றும் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் கொண்டுவந்தார்.

இதனை சபையில் சமர்ப்பித்து கருத்துத் தெரிவித்த அவர் இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று அரசிடம் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்தார்.

இப்பிரேரணையை ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைத்து மாநகர சபை உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். இத்தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (பா)

### 2013 பொதுநலவாய...

அரசாங்கத்தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டதை ஞாபகப்படுத்தினார். இது குறித்து ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதனால், இந்த விடயத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறினார்.

இவ் உச்சிமாநாட்டில் சில கல்விமான்களின் குழுவொன்று மனித உரிமைகள் மற்றும் இலங்கையின் சட்டபூர்வமான ஆட்சி நடத்தப்படுவது பற்றி ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கும் யோசனைக்கு இந்தியா ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். இந்த சிறு விடயங்களை மறந்து அபிவிருத்திக்கான சவால்களுக்கு எவ்விதம் பொதுநலவாய அமைப்பு நாடுகள் முகம் கொடுக்க வேண்டுமென்ற யதார்த்தபூர்வமான பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலேயே இவ்வமைப்பின் பெரும்பாலான நாடுகள் ஆர்வம் கொண்டிருக்கின்றன என்று ரஞ்சன் மாத்தாய் மேலும் தெரிவித்தார்.

நாம் ஜனநாயக தாற்பரியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில் சட்டபூர்வமான ஆட்சி மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளோம். எனவே, பொதுநலவாய நாடுகள் ஏற்கனவே உள்ள அமைப்புகளை பலப்படுத்த வேண்டுமேயன்றி புதிய அமைப்புகளை ஏற்படுத்துவது அவசியமில்லை என்றும் ரஞ்சன் மாத்தாய் தெரிவித்தார்.

### குடாநாட்டின் தற்போதைய...

சுகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்திய வீட்டுத் திட்டங்கள் குறித்த காணொளிகள் குழுவினருக்கு காண்பிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் முறையான பொறிமுறை அமைப்பொன்று இல்லாததுடன், கழிவு நீர் தேங்கி நிற்பதாலும் குடிநீர் பெருமளவு மாசடைந்து வருகின்றது என கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு வெளிநாடுகளுக்கு கடலுணவுகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள் கொண்டுசெல்லப்படுகின்றன. ஆனால் அவற்றை மேம்படுத்துவதற்கான வசதிகள் இல்லாமல் உள்ளன. குடாநாட்டின் மின் விநியோக வசதிகள் சீரானதாக இல்லை.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் இங்கு பாதுகாப்பை மேற்கொள்வது கடினமான ஒன்றாக உள்ளது.

அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால் யாழ். மாவட்ட மீனவர்கள் தாக்கப்படுவதுடன் அவர்களின் நாளாந்த வாழ்க்கையும் பாதிக்கப்படுவதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் -


இந்திய மீனவர்கள் தொடர்பாக இந்திய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. குடாநாடு கடந்த வருட காலத்தில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

120 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளதாகவும் அதில் 7 பேர் அடங்கிய குழுவே குடாநாட்டிற்கு வந்து அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்து கொழும்பிலுள்ள ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனைச் சேர்ந்த லோர்ட் ஜோர்ஜ் போல்கஸ் தலைமையில் பெனடிக்ற் லகாய் (சியராலியோன்), நிலுவர் சௌத்திரி மோனி (பங்களாதேஷ்), அசிஸ் கஜசின் (சுறினேம்), சுதர்சன நாச்சியப்பன் (இந்தியா), அஷ்ரப் சௌத்திரி (நியூசிலாந்து), பீற்றர் பராக்றொவ்ட் (திட்ட இணைப்பாளர் பி.ஜி.ஏ) ஆகியோர் வருகை தந்தவர்களாவர்.

# கூட்டமைப்புடன் ஐ.நா.செயலர் பேசுவதை சந்தேகத்துடன் பார்க்கின்றனர் மக்கள்

## என்கிறார் அமைச்சர் டலஸ்



(யாழ்ப்பாணம்)

இலங்கை எமது நாடு என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த நாட்டுக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும் எமக்கு ஆட்சேபனை இல்லை என சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளை மீறி அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் நடத்தும் சந்திப்பை இலங்கை மக்கள் சந்தேகக் கண்ணுடனேயே நோக்குவதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைகளத்தின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அந்நாட்டுக்கு விஜயம் செய்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் ஆணையை பெற்ற ஒரு அரசியல் கூட்டமைப்பாகும். மக்கள் அந்த கூட்டமைப்புக்கு பிரதிநிதித்துவங்களை வழங்கியுள்ளனர்.

அவ்வகையில் எந்த நாட்டுக்கும் விஜயம் செய்து எந்தத் தரப்பினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு காணப்படுகின்றது. அதனை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த நாட்டுக்கு சென்று யாரைச் சந்தித்தாலும் இலங்கை எமது நாடு என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும் என்று கருதுகின்றோம்.

இலங்கை எமது நாடு என்ற அடிப்படையில் யாருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும் பேசும் விடயதானங்கள் குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ள மாட்டோம்.

அதனைவிடுத்து வரலாற்றில் இடம்பெற்றதைப் போன்று இலங்கையர் அல்லாதவர்களைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படக்கூடாது என்பதே எமது கோரிக்கையாக உள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள சபையின் செயலாளர் நாயகத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் யெலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு எந்தவொரு பிரஜையையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உரிமை இருக்கின்றது. அந்த வகையில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தலாம்.

ஆனால் இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் விதி முறைகளை மீறி பான் கீ மூன் செயற்பட்டுள்ளார். நிபுணர்கள் குழு தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக மட்டும் நியமிக்கப்படுவதாக கூறி விட்டு பின்னர் அதன் தன்மையை மாற்றுவதற்கு அவர் எத்தனித்தவர்.

இத்தகைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமையை இலங்கை மக்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கினறனர் என அவர் மேலும் தெரிவிததுள்ளார்.

# மனித உரிமை ஆணைக்குழு சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்


மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள சிவில் சமூகத்தினருடனான கலந்துரையாடல் நாளை காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கிறின் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றுள்ளது.

இதில் சர்வமத குழு, அரசசார்பற்ற நிறுவனங்கள், பழைய மாணவர் சங்கங்கள், சமூக நிறுவனத் தலைவர்கள், கழகங்கள், ஊடக நிறுவனங்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள், வர்த்தகசம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் மனித உரிமைத் தலைமைக் காரியாலய அதிகாரி கலந்துகொள்ளவுள்ளார். இக் கலந்துரையாடல் 3 ஆவது தடவையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (எவ்.எஸ்)

# அரச அரசியல்வாதிகளின் ரவுடித்தனம் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம்

## அமைச்சர் விமல் கூறுகிறார்



நாட்டின் தலைவர்களுகக்கு எதிராக பிரிவினைவாதிகள் வழகுத் தொடுத்த சம்பவங்கள் உள்ளன. தலைவர்களை போர்க் குற்றங்களுகக்காக சர்வதேச நீதிமன்றங்களில் நிறுத்துவதற்கு ஆதாரங்களையும் அவர்கள் தேடினர். அரசாங்க அரசியல்வாதிகள் ரவுடிகள் போல் செயற்பட்டால அது நாட்டின் மதிப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் என அமைச்சர் விமல் வீரவன்ச கூறினார்.

மெதகமவில் படைவீரர்களுக்கான வீடமைப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முல்லேரியா சம்பவத்தில் பரஸ்பரம் சுட்டுக்கொண்ட இரு தரப்பினரும் அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் என்பதால் இச்சம்பவம் அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாமல் முழு நாட்டிற்கும் ஒரு கறுப்புப் புள்ளியாகும் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச கூறினார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் வெல்வதற்கு மெதகம மக்கள் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கினர். தாய் நாட்டை விடுதலை செய்வதற்காக உயிர்தியாகம் செய்த ஒரு யுத்த வீரரையாவது கொண்டிருக்காத குடும்பமொன்றை இப் பகுதியில் காண்பது கடினமாகும். இந்த ரணவிரு வீடமைப்புத் திட்டம் அவர்களின் தீரச்செயலுக்கும் தேசாபிமானத்திற்குமான சின்னமாக விளங்கும் என அவர் தெரிவித்தார்.

# கப்பம் பெற்ற கிராம அலுவலர் வகையாக மாட்டிக்கொண்டார்

கடமையை செய்வதற்காகக் கப்பம் வாங்கிய கிராம சேவை உத்தியோகித்தர் ஒருவர் லஞ்ச ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார். சீதுவல, சீதாவக்க பிரதேச கிராம அதிகாரியிடம் பிரதேச பெண்மணி ஒருவர் பலா மரம் ஒன்றை வெட்டுவதற்கான அனுமதிகோரியிருந்தபோது, அனுமதியை வழங்காமல் இழுத்தடித்த பின்னர் அனுமதியினை வழங்கினார். அதற்காக ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கிய போது வகையாக மாட்டிக் கொண்டுள்ளாார். இவர் நேற்று அவிஸாவலை நீதிமன்றில் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளால் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கல்விச் சுற்றுலா இன்று ஆரம்பம்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரி மாணவர்களின் கல்விச் சுற்றுலா பாடசாலையிலிருந்து இன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதாக பாடசாலை அதிபர் கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

126 மாணவர்களும், 13 அசிரியர்களும், 5 பெற்றோரும் இக் கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்கின்றனர். இக்கல்விச் சுற்றுலாவிற்கான அனுசரணைகளை 51 டிவிசன் பிரிகேடியர் விக்கிரமரட்ண மற்றும் 512 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த கொமான்டர் கேணல் விக்கிரமசூரிய மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

அத்துடன் மூன்று பேருந்துகளில் பயணமாகும் இக் கல்விச் சுற்றுலாவிற்கு தரம் 9, 10, 12 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்வாங்கப்படுவதாகவும் மேற்படி பாடசாலையின அதிபர் தெரிவித்துள்ளார். (85)

# யாழ்.மாநகர மாதாந்த கூட்டத்தை புறக்கணித்தது முஸ்லிம் காங்கிரஸ்

யாழ்.மாநகரசபையின் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் நால்வர், யாழ் மாநகரசபையின் 10 ஆவது மாதாநக் கூட்டத்தை நேற்றுப் பகிஸ்கரித்ததாக அக்கட்சீயின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் முஸ்தப்பா தெரிவித்துள்ளார். யாழ். மாநகரசபயின் துணை முதல்வர் பதவியினைத் தமது கட்சியின் உறுப்பினருக்கு வழங்குமாறு கோரியே அவர்கள் இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தமது கட்சியின் மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு இப்பதவியினை வழங்குவதற்கு இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது அமுல்ப்படுத்தப்படவில்லை. இவ்விடயம் குறித்து மாநகரசபை முதல்வருடனும் பல தடவை கதைத்தும் பயனேதும் ஏற்படாத நிலையிலேயே இப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். முகமட் ரமேஸ், அஸ்கர் லூமி, அஸ்வர், முஸ்தபா ஆகிய 4 மாநகரசபை உறுப்பினர்களே நேற்றைய கூட்டத்தை பகிஷ்கரித்தனர். இவர்களில் முஸ்தபா மட்டுமே மாநகர சபைக்கு வந்திருந்தபோதும் அவர் கூட்டம் தொடங்கியவேளை அங்கிருந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# நியமனம் வழங்காவிடின் ஆர்ப்பாட்டம் தமிழ் பட்டதாரிகள் சங்கம் தெரிவிப்பு

பல்வேறுபட்ட அசாதாரண சூழ் நிலைகளிலும் நிறைந்த துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும் பல விதமான கனவுகளுடன் கல்வி பயின்று சித்தியடைநது பட்டங்கள பெற்ற பின்னரும் தொழில்வாய்ப்பின்றி பட்டதாரிகள் காணப்படுகினறனர். இவர்களுக்கான நியமனங்களை விரைவில் அரசாங்கம் வழங்க வேண்டும் இல்லையேல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட நேரிடும் என வவுனியா மாவட்ட தமிழ் பட்டதாரிகள் சங்கத்தின் அமைப்பாளர் இரா.ஜயமோகன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், பட்டதாரிகள் இன்று தமது வேலைவாய்ப்பிற்காக வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பல பட்டதாரி இளைஞர், யுவதிகள் குடும்ப வறுமையின் காரணமாக கூலித்தொழிலாளர்களாக மாறியுள்ளனர். இது அவர்களுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலையாகும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கி பல்கலைக்கழக நுழைவினை வழங்கும் அரசாங்கம் அதே மாணவர்கள் பட்டங்களை பெற்று வெளியேறியவுடன் பாராமுகமாக இருப்பதற்கான காரணம் என்ன? கடந்த மாதங்களில் பொதுநிர்வாக சேவைக்கு நடத்தப்பட்ட பரீட்சைகளில் பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் பரீட்சைக்கு தோற்றி புள்ளி அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்திருந்தும் இதுவரையில் முடிவுகள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்க சார்பானவர்கள் தமக்கு சார்பான பட்டதாரிகளின் பெயர்களை இரகசியமாக திரட்ட வருவதனால் நியமனங்கள அரசியல் சார்பானதாக அமைந்துவிடுமே எனவும் எண்ணத் தோன்றுகிறது. இந்நிலையில் பட்டதாரிகளை தொடர்ந்தும் நேர்முகத் தேர்வு, பரீட்சை என இழுத்தடிப்பு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். எனவே உடனடியாக கால மூர்ப்பின் அடிப்படையில் நியமனங்களை அரசாங்கம் வழங்க வேண்டும் இல்லையேல் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வெண்டியேற்படும் எனவும் தெரிவித்தார்.

# ஒருகோடி பெறுமதியான ஹெரோயின் தலைமன்னாரில் மீட்கப்பட்டது



தலைமன்னாரில் 1 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின்பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமன்னார் பொலிஸாருக்கு கிடைக்கபபெற்ற இரகசியத் தகவலை அடுத்து தலைமன்னார் கிராம்மத்தில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைத்திருந்த 1 கிலோ 500 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் போதைப் பொருளை தலைமன்னார் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மன்னால் பொலிஸ்நிலைய தலைமையக பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த போதைப் பொருளை மீட்டுள்ளதோடு 4 பேரையும் கைது செய்துள்ளனர்.

வீட்டில் உள்ள அலுமாரி ஒன்றினுள் மறைத்து வைத்திருந்த மூன்று பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளனர். பின் அதனை சோதனைகுறபடுத்தியபோது அப்பொதிகள் அனைத்திலும் ஹெரோயின் போதைப்பொருள் காணப்பட்டமை தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த வீட்டில் இருந்த ஒரு பெண் உட்பட நான்கு பேரை தலைமன்னார் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் 1 கிலோ 500 கிராம் நிறைகொண்டதாகவும் இதன் பெறுமதி 1 கோடி ரூபாய் எனவும் தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.